259

உ

பரதேவி துணை

# ஸ்ரீ லலிதாம்பாள் சோபனம்

## தேவிபாடம்

---

பிந்துத்ரிகோண வஸுகோண தஶாரயுக்ம।
மன்வஸ்ர நாகதள ஸங்கத ஷோடஶாரம் ।
வ்ருத்தத்ரயஞ்ச தரணீஸதனத்ரயஞ்ச
ஸ்ரீசக்ரராஜமுதிதம் பரதேவதாயா :॥

बिन्दुत्रिकोणवसुकोणदशारयुग्म
मन्वस्रनागदलसङ्गतषोडशारम् ।
वृत्तत्रयञ्च धरणीसदनत्रयञ्च
श्रीचक्रराजमुदितं परदेवतायाः ॥

2 AUG 1967

சென்னை

R. S. சுபலக்ஷ்மி அம்மாளால்
பிரசுரிக்கப்பட்டன.

1967

…d] [விலை 60 புதிய காசு

W25:417
N67
109463

௳௫5:417
N67 1094630

உ

பரதேவி துணை

# முகவுரை

இதிலடங்கிய முதற் பாகமாகிய லலிதாம்பாள் சோபனம் மலையாளத்தில் அதிகமாய்ப் பாடப்படுகிறது. அவ்விடத்திலுள்ள ஸ்திரீகள் வெள்ளிக்கிழமை, செவ்வாய்கிழமை, நவராத்ரி முதலிய புண்ணிய தினங்களில் இச்சோபன முழுவதையும் பக்தி ஆசார நியமத்துடன் பாடி, அல்லது பாடச்சொல்லிக் கேட்டு, பாயசம், பழம் தாம்பூலம் முதலியவைகளை அம்பிகைக்கு நிவேதனம் செய்து குழந்தைகள் சுமங்கலிகள் முதலியவர்களுக்கு விநியோகித்து தேவியைப் பிரார்த்தித்து வணங்குகிறார்கள். இப்படிப்பட்ட மகிமை பொருந்திய சோபனத்தை அச்சிட்டால், தேவிபக்தியுடையவர்கள் அநேகருக்கு பாராயணத்திற்கு யோக்கியமாகுமென்று கருதி தேவியின் அருளை முன்னிட்டு இதை அச்சிடலானேன். வாய்பாடமாக வழங்கியதால் இதிற்பொதிந்து கிடந்த அநேகம் பிழைகளைத் கூடியமட்டும் திருத்தியிருக்கிறேன். இச்சோபனத்தில் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனத்திற்காகவெடுந்த தேவியின் சில அவதாரங்கள் சொல்லப்பட்டிருப்பதுடன் மஹாவிஷ்ணுவின் அவதாரங்கள் சில தேவியினுடையதாகவே சொல்லப்பட்டிருக்கின்றன. அதேதென்றால் பரமேசுவரியான தேவியும் விஷ்ணுவும் ஒன்றுதான். ஸ்ரீமகாவிஷ்ணு, ஸ்ரீகிருஷ்ணன், ஸ்ரீராமன் என்னும் பெயர்களில் ஸ்ரீ என்னும் அக்ஷரம் மங்கள சப்தமாயிருப்பதோடு கூட 'ஸ்திரீ' என்னும் பொருளையும் உடைத்தாயிருக்கிறது. தேவியின் அம்சந்தான் விஷ்ணுவென்றும் விஷ்ணுவின் அம்சந்தான் தேவியென்றும் அதனால் தேவியும் விஷ்ணுவும் சகோதரர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் விஷ்ணு மோகினி ரூபமெடுத்த காலத்தில் ஈசுவரன் மோஹினியைச் சேர்ந்து ஹரிஹரபுத்திரருண்டானதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஒருபாதிமால் கொள மற்றொரு பாதி உமையவள் கொண்டிருபாதியாலு மிறந்தான் புராரி,"

என்று ஒருகவி சொன்னபடி அர்த்தநாரீசர் என்றும் சங்கர நாராயணர் என்றும் ஈசுவரனுக்கு இரண்டு நாமங்களும் ஐதீகமும்

ஏற்பட்டுள்ளன. மேலும், வைஷ்ணவி விஷ்ணு ரூபிணி, நாராயணி என்பன தேவி ஸஹஸ்ர நாமங்களில் சிலவானதால் விஷ்ணு புராணத்தில் விஷ்ணு எடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கும் அவதாரங்கள் தேவி புராணத்தில் தேவி எடுத்ததாக வருவது பொருந்தும்.

இச்சோபனத்தில் விரிவாகவரும் விஷயங்கள் ஸ்ரீலலிதோபாக்யானத்திலும் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் சிலவற்றிலும் அடங்கியுள்ளன.

திருப்பாற் கடலில் ஆலிலைமேல் ஸ்ரீ மகாவிஷ்ணு சயனித்திருக்கும்போது, அவருடைய நாபியிலிருந்து ஒரு கமலமுண்டாகி அதிலிருந்து பிரம்மா அவதரித்து ஒன்றுந் தோன்றாமல் மயங்கி நான்கு திக்கும் பார்க்க, அம்மயக்கத்தைப் போக்க தேவி பிரஸன்னமாகி அவருக்குத் தெளிவையும் சிருஷ்டி வல்லமையையும் அளித்து, விஷ்ணுவின் யோக நித்திரையைக் கலைத்து மதுகைடவர் என்ற அஸுரர்களைக் கொல்லுமுபாயமும், சக்தியும் இவருக்குக் கொடுத்து மறைந்து விட்டாள். இது தேவியின் முதலாவது அவதாரம்.

திருப்பாற்கடலைக் கடைந்த காலத்ல் அதிலுண்டான அம்ருத குடத்தை அஸுரர்கள் பலாத்காரமாய் அபகரித்துக் கொண்டோட இந்திரன் முதலான தேவர்கள் சக்தியற்று பரதேவியைத் தியானம் செய்தார்கள். அம்பிகை மோகினி வேஷத்துடன் பிரஸன்னமாகி அஸுரர்களை மயக்கி, அம்ருதத்தை வாங்கி தேவர்களுக்கு ஸகல ஸாம்ராஜ்யமும், சாவில்லா வரமுங் கொடுத்து மோஹினி ரூபத்தைக்கண்டு மயங்கின ஈச்வரனைச் சேர்ந்து ஹரிஹர புத்திரரை உண்டாக்கிவிட்டு அந்தர்த்தான மடைந்தாள். இது தேவியின் இரண்டாவது அவதாரம்.

தக்ஷப்பிரஜாபதி தவம் செய்து ஈசரைத் தனக்கு மாப்பிள்ளையாக வேண்டுமென்று கேட்டுக்கொண்ட வரத்தை அந்த ஈசர் கொடுத்து விட்டதற்காக தாக்ஷாயணியாய்ப் பிறந்து அவனிடம் வளர்ந்து, ஈசரை அடைந்திருக்கும்போது தக்ஷன் அகம்பாவத்தால் ஈசருக்கு ஹவிர்ப்பாகம் கொடாமல் யாகம் நிறைவேற்ற எத்தனிப்பதை தேவி கண்டு அந்த துஷ்டனால் வளர்க்கப்பட்ட தேகத்தையும், நாமத்தையும் விடக்கருதி யாகத்தீயினிற் குதித்து மறைந்தாள். இது தேவியின் மூன்றாவது அவதாரம்.

ஹிமோத்பர்வத ராஜனுடைய தவத்திற்கிரங்கி குழந்தை ரூப மாய் அவரிடஞ் சென்று அவரால் பார்வதி எனப்பெயரிட்டு வளர்க் கப்பட்டு கன்னிப்பருவமுதல், ஈசரை நோக்கி (பூர்வ அவதாரத்தில் அவர் சொல்லை மறுத்து தக்ஷன் யாகசாலைக்குத் தான் போன குற்றம் நீக்க) தவம் புரிந்து பிறகு அவரையடைந்து தேவர்கள் வேண்டுகோளால் குமாரரைப் பெற்று தன் சக்தி வேலாயுதத்தை அந்த குமார மூர்த்திக் களித்து அவரால் சூரன் முதலான அஸு ரர்களை வதைத்து தேவர்களுக்கு உண்மையை அளித்தாள். இது தேவியின் நான்காவது அவதாரம் :

ஈசுவரர் மன்மதனைத் தகித்தவுடன் விசுவகர்மா அந்தச் சாம் பலைப் பிசைந்து உருவாயமைக்க ஈசரின் கிருபா நோக்கினுல் அவ் வுரு உயிர்பெற்று, ருத்ரகோபாக்கினி பஸ்மத்திலுண்டானதால் ஓரஸுரஞகி, பண்டாஸுரனெனப் பெயர் பெற்று, தேவர்களைப் பெரும்பாடு படுத்தவே, தேவர்கள்கூடி அம்பிகையைக் குறித்து ஸ்ரீவித்தை என்கின்ற ஜபம் செய்து மந்திர யந்திர தந்திரௌ பாஸஞதிகளும் பஞ்சயக்ஞங்களும் பொரித்த தங்களுடம்பை யறுத்து ஓமம் பண்ணினுர்கள். அப்பொழுது அந்த ஓமக்குண் டத்தின் மத்தியில் ஸ்ரீ சக்ரமென்கிர ரதத்தில் அம்பிகை பிரத்யக்ஷ மாகி தேவர்கள் காயங்களையாற்றி, அவர்களுக்கு ஸ்தோத்திரம் செய்யப்பட்டு லலிதாம்பாள் என்ற நாமத்துடன் ஈசரையடைந்து அநேகஞ் சக்திகளைத் தன் அம்சங்களாய் உண்டு பண்ணிக் கொண்டு பண்டாஸுர ஸைனியங்களையும் பண்டாஸுரனையும் ஸம்ஹாரம் செய்துவிட்டு சிந்தாமணிக்கிரஹத்தில் காமேசருடன் ஸௌபாக்யவதியாயிருந்தாள். இது தேவியின் ஐந்தாவது அவதாரம்.

இந்த லலிதா அவதாரமும் பண்டாஸுர யுத்தமும்தான் இந்தச் சோபனத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமங்களிலொன்ருகிய "காரங்குளி நகோத்பன்ன நாராயண தசாகிருதி' என்னும் நாமத்திற்கிணங்க ஸ்ரீ மகாவிஷ்ணு எடுத்த தசா வதாரங்களும் ஸ்ரீ லலிதா தேவியின் பத்து விரல்களினின்று உண் டானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மகாதேவியுடைய மகிமைகளை ஒருவராலும் வர்ணிக்க முடியாதானுலும் இந்தச் சோபனத்தில் சொல்லியிருக்கிறமட்டும் படித்தாலும்கூட மனதிற்கு விஸ்ராந்தியும் ஆனந்தமும் உண்டாகிறதென்பதிற் தடையில்லை,

இரண்டாம் பாகமாகிய தேவிபாடம் என்பது மலையாளமல்லாது மற்ற பாகங்களிலும் அநேக விடங்களில் வழங்கும் ஒரு பழைய

காலத்துப்பாட்டு. இதையும் நிரம்பத் திருத்தி தேவிபாகவதத்திற் கிணங்க அநேக விடங்களை உருவாக்கியிருக்கிறேன்.

துஷ்ட நிக்ரஹத்திற்கும் சிஷ்டபரிபாலனத்திற்குமாய். பர தேவதை அவ்வப்பொழுது எடுத்த அவதாரங்களின் பராக்கிரமங்களை விவரிக்கும் இப்பாடல்களை பலரும் படித்து பக்தி வைராக்கிய மடைந்து தேவியின் கிருபைக்கு பாத்திரர்களாவார்களாக.

ஓம்—தத் ஸத்

R. S. சுபலக்ஷ்மி

---

24-வது பதிப்பு—2000

காபிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

---

எனதருமைமிக்கதாயாரால்

பக்தியுடன் பூஜிக்கப்பட்ட

## ஸ்ரீ பரதேவிக்கு

இதை சமர்ப்பிக்கிறேன்.

Bharati Vijayam Press, Triplicane, Madras-5.

உ

பரதேவி துணை.

லலிதாம்பிகாயை நம:

# ஸ்ரீலலிதாம்பாள் சோபனம்.

('சீர்மேவுந் தில்லை' என்ற கும்மி ராகத்திலும் பாடலாம்)

1. மங்களமான லலிதாம்பாள் சோபனம்
 மங்களமுண்டாகப் பாடுகிறோம்
 ஸ்ரீங்கார கணபதி ஷண்முகர் ஸரஸ்வதி
 எங்கட்கு முன்வந்து காப்பாமே

 முப்பத்துமுக்கோடி தேவாளும் இந்திரனும்
 மும்மூர்த்திகளும் வேதப்பிராமணாளும்
 நாற்பத்து முக்கோண நாயகியாளம்மன்
 நாதர் காமேசருங் காப்பாமே:

காஞ்சி நகரத்தில் காமகோடி பீடத்தில்
எழுந்தருளியிருக்கும் காமக்ஷியம்மையை நோக்கி
அகஸ்திய மஹரிஷி தபஸிருத்தல்

2. ஆதி பிரம்மரிஷி அகஸ்தியரும்
 அகிலலோகம் சஞ்சரிப்பவரும்
 ஜோதிகாமாக்ஷியை காஞ்சி நகரத்தில்
 ஸ்துதித்து பூஜைசெய்து தபஸிருந்தார்

 சங்கு சக்கரம் வலக்கை புஸ்தகமும்
 தரித்தேஹயக்ரீவர் மஹா விஷ்ணுவாய்
 தங்கவர்ணி லோபா முத்திரை மணவாளன்
 தபஸிற்கு முன்வந்தார்—சோபனம் சோபனம்.

3. எட்டிரண்டுபசார பூஜைகள் முதலாக
 எல்லாவற்றையும் பக்தியுடனே செய்து
 ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்துமந்த
 அகஸ்தியர் வேதத்தால் ஸ்துதித்து நின்றார்

 கும்பமுனியுட தபஸாலே மனம்
 குளிர்ந்தயக்ரீவருந் தானுரைப்பார்

இன்பமாகச்செய்தாய் பூஜையகஸ்தியா
என்னவேண்டுமென்ருர்—சோபனம் சோபனம்.

4. துரகவதனருட அம்ருதவசனங்கேட்டு
சொல்லுவர் மித்திர வருணபுத்ரர்
அபயவர தகரர் அருமையாய் நான் கேட்கும்
வரந்தரவேணுந் தயவுசெய்து
கலியுகந்தனிலிந்தப் பாமர ஜனங்கட்கு
கைவல்யஞானம் எப்படி யுண்டாகும்
எளிதாகவே ஒரு உபாயஞ் சொல்லுமென்று
இரந்துகேட்கலுற்ருர்—சோபனம் சோபனம்.

5. ஆதரவுடன் ஜனங்களுக்குபகாரமாய்
அகஸ்தியர்க் ஹயக்ரீவர் எடுத்துரைப்பார்
ஏதகஸ்தியரே இந்தப் பிரச்னந்தான் சியவனருக்
கென்னுலே முன்னஞ் சொல்லப்பட்டது
ஆனுலும் நீர் கேட்டது சொல்லுவோமிப்போ
அன்புடன் கேளும் ஏகமனதாய்
இன்றுமுதல் உமக்காகு முபதேசத்தால்
எல்லோறும் கேட்க்கட்டும்—சோபனம் சோபனம்.

6. ஆதிபராசக்தி யனுக்கிரகத்தால்
ஆத்மக்கியானம்வரும் மானிடர்க்கு
மாதவர் மாய்கை யில்லாதே விட்டாலிந்த
மானிடர்களுக்கு மயக்கமில்லே
ஹயக்ரீவர் சொற்கேட்டு அகஸ்தியர்பின்னும்
ஆதி பராசக்தி ரூபங்களே
தயவுசெய்து எனக்குச் சொல்லவேண்டுமென்று
தண்டனிட்டுக் கேட்டார்—சோபனம் சோபனம்.

7. அந்த ஹயக்ரீவர் தம்முடைய மனதில்
அம்பிகை பாதத்தை நமஸ்கரித்து
அகஸ்தியர் கேட்பதெல்லாஞ்சொல்லுவோமென்று
எழுந்தருளினுர் அச்வமுகர்
அகஸ்தியருமந்த ஹயக்ரீவரைத்தன்
ஆசிரமத்தில் கூட்டிக்கொண்டுவந்து
பகவானே ஆசனந் தன்னில் வைத்துப்பின்
பணிந்து கேட்கலுற்ருர்—சோபனம் சோபனம்.

8. " பகவானே ! தர்ம சாஸ்திரங்களெல்லாம்
பிறந்தது உம்மிடத்திலிருந்து
மகாதேவியுடைய அவதாரங்களை
மாதவா விஸ்தரித்துச் சொல்லவேணும்."

அன்புடன் கேட்ட அகஸ்தியரை வாழ்த்தி
ஹயக்ரீவமூர்த்தியும் எடுத்துரைப்பார் ;
அம்பிகையுடைய அவதாரங்கள் சொல்ல
ஆரம்பித்தாரப்போ—சோபனம் சோபனம்.

### மகா விஷ்ணுவின் அம்சாவதாரமாகிய ஹயக்ரீவர் அகஸ்திய மகரிஷிக்கு தேவி மஹாத்மியத்தைச் சொல்ல ஆரம்பித்தல்

9. ஆதியந்தம் பராசக்திக்கில்லை
ஆதாரமுஞ் ஜகத்துக்கிவள் தான்
ஜோதிரூபியுடைய ரூபங்களை யெல்லாம்
சொல்லமுடியாதொருவராலே

ஆனாலும் தெரிந்தமட்டுக்கு மிப்போ
அவளுடசில அவதாரஞ்சொல்வோம்
முன்னே பிரம்மாவின் த்யானத்தில் ரக்ஷிக்க
முதல்வந்தாள் ஒருரூபம்—சோபனம் சோபனம்.

10. முன்னாள் தேவேந்திரன் வெள்ளையானை ஏறி
மூன்று உலகம் சுற்றிவரும்போது,
தன்னினைவில்லாமல் மதத்தினால் உமையவள்
சங்கரரையும் வணங்காமல் வந்தாள்,

இந்திரன் மதத்தை யடக்கவேண்டுமென்று
ஏவினார் ஈசரும் துர்வாஸரை ;
வந்து துர்வாஸரும் இந்திரன் கையிலொரு
மாலையைக்கொடுத்தார்—சோபனம் சோபனம்.

11. வாங்கி மாலையை இந்திரன் யானையினுடைய
மண்டையில் வைத்தான் மதத்தினாலே
ஓங்கித் துதிக்கையால் எடுத்தந்த மாலையை
உதறிப்பூமியில் காலால் மிதித்தது

துர்வாஸமுனி கண்டு அதிகோபத்துடனே
துர்புத்தி இந்திரனைச் சாபமிட்டார்

(உன்) கர்வமல்லோ இந்திரா இதுசெய்யச் சொல்லிற்று
கர்வேச்வரி போமேன்ருர்—சோபனம் சோபனம்.

12. சபித்துவிட்டு முனி போகிய பின்பு
சக்ரேசன் அமராபுரியில் வந்து
அப சகுனங்களைக் கண்டு பயந்து
ஆசாரியர் பிரஹஸ்பதியை வருத்தி
ஆசனத்தில் வைத்து நமஸ்கரித்து
அவரைப் பார்த்திந்திரன் ஏதுரைப்பான்,
தேசத்தில் துர்நிமித்தம் காணுகின்றதே
தேவரீர் வழிசொல்லும்—சோபனம் சோபனம்.

13. தேவகுருவுங் கேட்டுச் சொல்வார் இந்திரனேடு
செய்தகர்மம் அனுபவித்தே தீரும்
பாபகர்மம் அனுபவித்தாற்ருன் தீரும்
பிராயச்சித்தத்தினுல் போவதில்லை
நிவர்த்தியினுலே ஒருநாளும் போகாது
லக்ஷங்கோடி ஜன்மம் ஆனுலும்
ஒன்றுகேள் பாபத்துக்கு நிவர்த்தி வாஸவனே
உண்மைநான்சொல்லுவேன் சோபனம் சோபனம்.

14. ஹத்தி திருட்டு ஹிம்ஸை பானம் பரதாரம்
அஞ்சும் பஞ்ச மகாபாதகமாம்.
அறியாத் தனத்தாலே ஐந்து பாபமும் செய்தால்
அந்தந்தச் சாதிபோல் நிவர்த்தியுண்டாம்
பிரம்மஹத்திக்கொரு சாஸ்திரத்திலுமில்லை
பிராயச்சித்தம் ஒருநாளுமிந்திரா! (சொல்லுவேன்)
திருட்டென்ற பாபத்திற்கோர் உபகதை
தேவேந்திரா கேள்—சோபனம் சோபனம்.

15. களவுத்தொழிலெங்கும் செய்து கொண்டுவரும்
கள்ள னுருத்தன் காஞ்சிப் பட்டணத்தில்
களவாண்ட பண்டங்களை கனமாய்ச் சேர்த்து நடுக்
காட்டிற்கொணர்ந்து புதைத்துவைத்தான்
கள்ளனுக்குள் கள்ளன் வேடனுருத்தன் அதைக்
கண்டு வனம்போனுன் பின்னுலே
மெள்ள வந்தந்தப் பணங்களை யெல்லாம்
முற்றிலும் எடுத்தான்—சோபனம் சோபனம்.

16. கொண்டு வந்தப் பணங்களையெல்லாம்
கொண்ட பெண்டாட்டி கையிற்கொடுத்தான்
பெண்டாட்டி வாங்கியுள்ளே வைத்துக்கொண்டு
புருஷனைப் பார்த்தொரு வாக்குரைப்பாள் ;
*வால்மீகர் சாபத்தால் வேடர்க்குத் தனங்கள்
விருத்திக்க மாட்டாது அதனாலே
நன்மையாய் நான் சொன்ன தர்மஞ் செய்தால்வெகு
நாளிருக்கும் தனம்—சோபனம் சோபனம்.

——o——

*ஒரு பிராமணன் தன்நெறி தவறி கிராதகத் தொழில் செய்த படியால் மறுஜன்மம் வேடனாகப் பிறந்தான். அவன் காட்டில் போவார் வருவாரை எல்லாம் வழி மறித்து கொள்ளை யடித்து ஜீவனம்செய்து கொண்டிருந்தான். ஒரு காலத்தில் ஸப்தரிஷிகள் அந்த வழிபோக அவன் அவர்கள் பொருளை அபகரிக்க அவர்களை வழிமறிக்கும்போது அந்த ரிஷிகள் அவனைப் பார்த்து "அப்பா, இப்பேர்ப்பட்ட கொடுந் தொழிலை விட்டு நல்ல மார்க்கத்தில் நட" வென்று சொன்னார்கள். அதற்கு வேடன், 'சுவாமிகாள்' என் குடும்பங்களை நான் காப்பாற்றவேண்டியிருப்பதால் வேறுதொழில் அகப்படாமல் இதைத்தான் செய்து குடும்பத்தை காப்பாற்றுகிறேன், என்று சொன்னான். இதைக்கேட்ட ரிஷிகள் 'இந்தப் பாபத் தொழிலால் வரும் சம்பாத்தியத்தை உன் குடும்பத்தார் அனுபவிக்கிறார்களே இதனால் வரும் பாபத்தையும் அவர்கள் பாகம்போட்டு அனுபவிக்கிறார்களா,' என்று அவர்களைக் கேட்டு வரும்படி சொன்னார்கள்,' அவன் வீடுசென்று பெண்டாட்டி பிள்ளைகளை ரிஷிகள் சொன்னபடி கேட்க அவர்கள் 'இது எங்கேயாவது உண்டா' சம்பாதித்துப் போடுவதுதான் உன் கடமை, பாபத்தை பங்கிட்டுக் கொள்வது எங்கள் கடமையல்ல' என்று சொல்லி விட்டார்கள். இதைக் கேட்டவுடன் வருத்தங் கொண்டு உங்கள் குலத்திற்கே ஐசுவரியஞ் சேராமல் போகக் கடவதென்று சபித்துவிட்டு ரிஷிகளிடம் ஓடிவந்து 'சுவாமிகாள்! எனக்கு நல்ல வழி சொல்லி விட்டுப்போக வேண்டு' மென்று கெஞ்சினான். மகரிஷிகள் இரங்கி தாரக மந்திரமாகிய ஸ்ரீராமநாமத்தை உபதேசித்தார்கள். நாமம் நாவில் நுழையவில்லை. அப்போது அங்கிருந்த மராமரத்தைக் காட்டி

இதன் பெயரை விடாமல் சொல்லிக்கொண்டிருந்தாயானல் முக்தனுவாய் என்று சொல்லிவிட்டுப் போனர்கள். அந்த நாமப்ரபாவத்தினலே அவன் மகரிஷியாகிய வால்மீகியானர் என்று புராணம்.

——o——

17. காரியமாமிந்த வார்த்தை கேட்டு வேடன்
கிராமம் தடாகந் தோப்பாலயங்கள்
பாரியாகச் செய்து பிராமணுளுக்கெல்லாம்
பக்தியுடன் தானஞ் செய்திருந்தான்
வேடன் வேடத்திக்கு காலங்கள் சென்றபின்
விஷ்ணுபிரம்மாசிவ யம தூதர்கள்
கூடிவந்தவர்களை அவரவர் லோகத்திற்குக்
கூட்டிப்போகவந்தார்—சோபனம் சோபனம்.

18. நாரதர்வந்திந்த தூதர்களுக்குச் சொல்வார் ;
நாலுமூன்ருண்டிவர்க்குக் காற்றுருபம்
திருடின பணத்துடையவர்க்குத் தர்மமென்று
திருப்பினர் நாரதர் தூதர்களை
பணத்திற்குடையவர்க்குத் தெய்வகிருபையாலே
பாபம் போய்ப் புண்ணியம் சித்தித்து
பணத்திற்குடையவர் நல்லகதியடைந்தார்
பார்த்துக்கொள் இந்திரா—சோபனம் சோபனம்.

19. ஜனங்களை ரக்ஷிக்கும் ராஜன் மாத்திரந்தான்
செய்யலாகுந்துஷ்ட நிக்ரகங்கள்
மனிதர்கள் பசுயக்ஞுந் தவறுதலாய்ச் செய்தால்
மாதேவி கோபித்து எரித்திடுவாள்
யுவனுச்வமகாராஜன் யக்ஞுத்தில் தேவர்கள்
ஒருவர்க்கொருவர் முந்திசண்டையிட்டார்
தேவர்க்கு பாகத்தைப் பிரித்துக்கொடுத்தார்
தயவாக பிரம்மாவும்—சோபனம் சோபனம்.

20. ஸுராபானம் செய்த பேர்க்கு நரகமுண்டு
சொட்டுக் கொருவருஷக் கணக்காக
பரதாரகமனத்தால் ஆயுஸுகுறைந்திடும்
பாபரோகம் நரகங்கள் உண்டு
பரதாரகமனத்தால் ராவணன் மாண்டான்
பாஞ்சாலியால் துரியோதனன் மாண்டான்

ஒருக்காலும் பரதார நினைவில்லாதவர்க்கு
ஒரு நாளும் அமடில்லை—சோபனம் சோபனம்.

21. பானம் பரதாரம் முன் சொன்ன மூன்றுடன்
பஞ்சமகா பாதங்கள் ஐந்து
ஏனிதுகளை எல்லாம் உனக்குச் சொன்னேன் என்றால்
இந்தப் பாபங்களெல்லாம் உனக்குமுண்டு
தீராதபாபங்கள் தீருந்தேவியுடைய
ஸ்ரீ பஞ்சதசாக்ஷரி ஜபத்தாலே
தீராத பாபத்தைச் செய்யாதே இந்திரா
சொல்லுவேன் உனக்கிப்போ—சோபனம் சோபனம்.

22. முன்னாலே தேவரும் நீயும் தாதா புத்திரன்
விசுவரூபனைப் புரோகிதராய்ச்
சொன்னபடிக்கு இருந்தான் உங்களுக்கு
துரோகமுஞ் செய்யவில்லை விச்வரூபன்
அனியாயமாயவனை நீ வதைத்தாய்
அஸுரர் மருமான் என்ற விரோதத்தால்
விச்வரூபனுடைய வதத்தால் பிரம்மஹத்தி
விரட்டித்துன்னை இந்திரா—சோபனம் சோபனம்.

23. விஷ்ணு அறிந்தந்த பிரம்மஹத்தியை
இஷ்டமாய் உன்மீதிரக்கத்துடன்
பக்ஷமாய் நாலுபங்காக்கி பிரம்மஹத்தியை
பூமி பெண்கள் மரங்கள் நதிகளுக்கும்
ஏற்றுக்கொள்ளச் சொல்லிக் கொடுத்து அவர்களால்
கேட்டவரங்கள் கொடுத்தனுப்பிவைத்தார்
விச்வரூபன் தகப்பன் அக்கினியில் வந்த
விருத்திரனைக் கொன்று (பிரம்ம) ஹத்திப்பட்டாய்

24. அதுவும் போதாதபடிக்கு துர்வாஸரும்
இந்திரா உன்னை வேணது சபித்தார்—
இது எல்லாம் ஒருமிக்கப்பலனனுபவிப்பாய்
இக்ஷணம் நிமித்தங்கண்டு சொல்லுகிறேன்
சோபையில்லைபார் உன்னுலகத்தில் இந்திரா!
சோறில்லாதவர்கள் போல் ஆனார் தேவாள்
லோபிகள் ஆனார்கள் உலகத்து விப்பிரர்கள்
ரொம்ப உற்பாதங்கண்டேன்—சோபனம் சோபனம்.

25. இப்படி இந்திரனுக்கு குருவுங் கதைகளை
எல்லாஞ் சொல்லிக்கொண்டிருக்கும்போது
மப்புத்தட்டிக்கொண்டு-அஸுராளுடனே
மலகனென்ற அஸுரராஜனும்
அமராபதியை வளைந்து தேவர்களை
அடித்து வெளியிலே துரத்திவிட்டான்
அமராளும் இந்திரனும் பிரம்மாவிடத்தில் போய்
அஸுரன் சேதியைச் சொன்னார்—
சோபனம் சோபனம்.

26. சதுர்முகர் கேட்டிந்த அஸுரர் சேதியெல்லாம்
தட்டுக்கெட்ட இந்திரனைப் பார்த்துரைப்பார்
இதற்கொன்றும் நம்மாலே ஆகாது இந்திரா
என்னுலேயாகும் உபாயஞ் சொல்வேன்.
அச்சுதரே ஜயம் தருவருங்களுக்கு
அவரிடம்போங்கள் என்ருருடனே
சச்சிதானந்தர் சமீபத்தில் அத்தனை
பேர்களும் வந்தார்கள்—சோபனம் சோபனம்.

27. சேஷசயனுருட சரணும்புஜங்களை
தண்டனிட்டு ஸ்தோத்திரங்கள் செய்து
காசாம்பூவர்ணரோடு தாங்கள் படுகின்ற
கஷ்டங்களைச்சொல்லி முறையிட்டார்கள்;
நாதரே உம்முட தாஸர்களேயான
நாங்கள் படுகின்ற சங்கடங்கள்
ஏதறியாமலிருக்கின்ற காரியம்
இந்த நித்திரையுண்டோ—சோபனம் சோபனம்.

28. மலகன் முதலான அஸுராளை வதைத்து
மாதவா இந்திரனை நிலையிலாக்கும்!
அல்லகிருேமே நாங்கள் வேஷத்தை மறைத்து
அந்தக்குறைவு உமக்கில்லையோ!
கருடவாகனரும் அவர்களைப் பார்த்து
கம்பீரமாய் ஒருவார்த்தை சொல்வார்;
ஒருக்காலும் உங்களுக்கு மரணமில்லாத ஓர்
உபாயத்தைச் சொல்லுவேன்
—சோபனம் சோபனம்.

29. அங்கேபோய்ச் சொல்லுங்கள் அஸுராளுடனே
அம்ருதபானஞ் செய்தோமானுக்கால்
உங்கட்கும் எங்கட்கும் சாவில்லை ஒருக்காலும்
எல்லோருமாயம்ருதங் கடைவோம்

இப்படிச்சொல்விய அஸுராளை எல்லாம்
இங்கே கூட்டிக்கொண்டு வாருங்கோள்
அப்போ அஸுரருக்கு வேலை மாத்திரம் மிஞ்சும்
அம்ருதம் உங்களுக்குத்தான்.
—சோபனம் சோபனம்.

30. பாற்கடலில் நான்கு ஔஷதிகளையும்
பறித்துக்கொண்டு வந்து போடுங்கள்—
நிற்காமல் போய் மந்தரத்தை மத்தாகவும்
நீண்ட வாஸுகியைக் கயிருகவும்

வைத்துக்கொண்டு கடலைக் கடைந்தீரானுல்
வருமதிலேயிருந்து அம்ருதகுடம்—
நிச்சயமாய் உங்களுக்தான் அம்ருதம்
நீங்களே புஜிப்பீர்கள்—சோபனம் சோபனம்.

தேவர்களும் அஸுரர்களும் கூடி அம்ருதங்கடைதல்.

31. சாரங்கருடைய சம்மதத்தை எல்லாம்
சகல தேவாளும் அஸுராளுடன்
ஆங்காரமில்லாமற் போய்ச் சொன்னவுடனே
அந்தத் தானவா கேட்டு உள்ளதென்றே

க்ஷீராப்திக் கரையிலே கூடிவந்தார்கள்
சீக்கிரமே நான்கு ஔஷதிகளையும்
சேர்ந்துகொண்டு அந்த தேவாளும் அஸுராளும்
க்ஷீராப்தியில் போட்டார்—சோபனம் சோபனம்.

32. மந்தரகிரியை மத்தாகவே கொண்டு
வாஸுகியைக் கயிருகக்கொண்டு
தந்தியாய் வாஸுகியை மூன்று சுற்ருக்கி
தலைப்புறத்தை அஸுராளிழுத்தாள்—

வாஸுதேவருட ஆக்ஞையால் தேவர்கள்
வால்புறத்தைப் பிடித்திழுத்தார்கள்

ஈசரும் பிரும்ம ரிக்ஷிகள் கந்தர்வாளும்
இது பார்க்கவந்தார்கள்—சோபனம் சோபனம்.

33. மந்தரகிரி அமிழ்ந்து போவதைக்கண்டு
மாதவரும் பார்த்துச் சங்கையுடன்
கீழேகூர்மமாகத் தாங்கி முதுகினில்
மேலேசங்கு சக்ரபாணியாகி

கூடித்தேவாளுடன் அம்ருதங்கடைந்து
கொடிய அஸுராளை மயக்கிவிட்டு
வாடுந்தேவர்கட்கு அம்ருதங்கொடுத்திட
மனதில் நிச்சயித்தார்—சோபனம் சோபனம்.

34. இழுக்கின்ற வேதனை பொருக்காமல் வாஸுகி
எரிக்கும் விஷத்தையப்போ கக்கியது
மழுப்போலெல்லாரையும் எரிக்கத்தொடங்கிற்று
மதனத்தை விட்டோடத் துவக்கினுர்கள் ;

பக்தாளுக்காபத்தைத் தீர்க்க வேண்டுமென்ற
பரமேசரும் விஷத்தை விழுங்கிவிட்டார்
ஸ்தோத்தரித்துப் பரமேசரைப் பின்னும்
துவக்கினுர் மதனத்தை—சோபன்ம் சோபனம்.

35. பாரிஜாதங் காமதேனுவும் ரத்னமும்
பிறந்து தேவேந்திரனிடம் சேர்ந்தது—
நாரியரும் வந்தாள் பாலசந்த்ரனும் வந்தான்
இந்திரனும் ஈசரும் அடைந்தார்கள்—

பின்னும் அநேகம் ரத்னங்களும் வந்திடப்
பிறகு அம்ருதகலசங்கொண்டு
தன்வந்தரி வந்தார் லக்ஷ்மிதேவி வந்தாள்
ஸ்வாமி விஷ்ணுவைச் சேர்ந்தாள்
—சோபனம் சோபனம்

## மோஹினி அவதாரமாகி அஸுராளை மயக்கி அம்ருதத்தை பங்கிடல்—ஹரிஹர புத்திரர் உற்பத்தி

36. வஞ்சக அஸுராள் அம்ருத கலசத்தை
வந்து பரித்துக்கொண்டு ஓடினுர்கள்
என்னசெய்வோமென்று தேவரும், போய்ப்பிடிக்க
இவர்கட்கும் அவர்கட்கும் சண்டையாக

லோகேசர் ஹரியிந்தச் சண்டையைக் கண்டு
(லோக) மாயையை த்யானித்தார் ஒரு முகூர்த்தம்
மோகினி வேஷந் தரித்து அசுரர்களை
மோகிப்பித்தாளம்மன்—சோபனம் சோபனம்.

37. சண்டைபிடிக்கின்றவர் நடுவிலே மோகினி
சந்தோஷமாய் மெள்ள நின்று வாராள்
தண்டை கொலுஸு பாதஸரம் பீலி காலாழி
தரித்தாள் நவரத்தினத்தால் பாதங்களில்
இழைசேர்ந்த பட்டுடன் மேகலாபரணமும்
இடையில் ரத்னக்கச்சை புறத்தில் கட்டி
இணையில்லா ரவிக்கையுடன் மார்பில் முத்துவடம்
இலங்கும் கைவளையுடன்—சோபனம் சோபனம்.

38. மாதளம் பட்டுப்போல் உதடுங் கனிவாயும்
மதனன் வில்லைப்போல் புருவங்களும்
காதுக் குண்டலத்துடன் மூக்கு நத்துஞ்ஜொலிக்க
கருங்குழலாள் பின்னல் சுட்டிமின்ன
தரித்துவருகின்ற மோகினியைக் கண்டு
தானவாள் சண்டையை நிறுத்திவிட்டு
ஆரிவள் என்று சுற்றிவந்து அஸுராள்
அம்ருதத்தை மறந்தார்கள்-சோபனம் சோபனம்

39. அப்போ மோகினிசொல்வள் அஸுரர்களுடனே
ஐயன்மார்களே கேளும் சண்டையானால்,
இப்போதென்கையிலே தந்தாலம்ருதத்தை
எல்லாத்தேவருக்கும் கொடுத்துச்கொஞ்சம்
கலசம் உங்கள் முன்னே தான்வரும் நிச்சயம்
காரியமென் றுங்கட்குத் தோன்றினால்
மலைக்காமல் தாருங்கள் அம்ருதகலசமென்று
மாய்கை மோகிப்பித்தாள்—சோபனம் சோபனம்

40. மூட அஸுராளும் அம்ருதத்தைக் கொடுத்துப்பின்
மோகித்து வரிசையாய் இருந்தார்கள்
உடனே தேவரும் ஒருவரிசையாய் இருந்தார்கள்
ஓகோ தேவர்க்கம்ருதம் பொழியுகிருள்
சொர்ணக்கரண்டியால் பரிமாரும்போது
சோபிக்கும் வளை பாதஸரங்குலுங்க

சொர்ணம்போல் மோகினியைக்கண்டு அஸுராள்
சும்மா யிருந்தார்கள்—சோபனம் சோபனம்.

41. பொட்டென அவ்வளவும் தேவர்கட்கு
பொழிந்து கொண்டொடுக்கத்தில் வரும்போது
ஒட்ட எடுக்கும்போது அகப்பையினுடைய
ஓசை குடத்திற்குள் கேட்கின்றது
மடையர் அஸுராளுக்கு அது கூடதெரிய(வி)ல்லே
மாய்கையை அறிந்தார் ராகு, கேதுவும்
நடுவில் ஒளிந்து சந்திரசூரியாளுடனே
ராகுவுங்குடித்தான்—சோபனம் சோபனம்.

42. சந்திராதித்தன் முதல் தேவாளுக்கெல்லாம்
சம்பிரமமாய் அம்ருதம் பொழிந்தாள்
சந்திர பாஸ்கரன் சொல்லிக் கொடுக்கவே
[அகப்பையால்
தலேயை அரிந்தாள் ராகுவை மோகினி
ராகுவின் தலேயிரண்டாயாகாசத்திற் போச்சு
(ராஜ) நாயகி கலசத்தை அஸுராள் முன்னே
வைத்துவிட்டு மோகினி அந்தர்த்தானமானுள்
விழிக்கிருர் அஸுரர்கள்!—சோபனம் சோபனம்

43. காணுதே மோஹினிதேவியையும், வெறுங்
கலசத்தையும் கண்டார் அஸுராளெல்லாம்
துணித்திவிடுவோமென்று அமராளுடனே
தொடுத்தார்கள் யுத்தத்தை பின்னுமவர்
சுதையுடபலத்தாலே தேவர்கள் அஸுராளே
துரத்தினுர் அடித்துப் பாதாளத்திலே!
ஸ்துதிக்கொண்டு விஷ்ணுவை ஸ்வர்க்கலோகத்தில்
ஸுகமாக இருந்தார்கள்—சோபனம் சோபனம்.

44. இந்த விருத்தாந்தத்தை நாரதரோடிப்போய்
ஈசரிடத்தில் சொல்லி அறிக்கையிட்டார்
அந்தக்ஷணம் சிவன் சீராப்திக்கரை தன்னில்
வந்து விஷ்ணுவுடன் வாக்குரைப்பர்,
லோகமாய்கையால் ஒரு ரூபம் எடுத்தீராம்
ஒருதரம் எனக்கதைக் காட்டுமென்ருர்.

ஆகட்டுமென்று விஷ்ணுவுஞ் சிவனை வீட்டு
அந்தர்த்தானமானார்—சோபனம் சோபனம்.

45. உமையின் பதியங்கே சுற்றிப்பார்க்கும்போது
உத்தியானவனங்கண்டார் அவ்விடத்தில்
அதிக ரூபமான மோகமாம் பெண்கொடி
அழகாகப் பந்தாடிக் கொண்டிருந்தாள்!
கண்டவுடன் சிவன் உமையைவிட்டோடிப்போய்
கட்டிப் பிடித்து ஆலிங்கனமுஞ் செய்தார்
உண்டானார் ஹரிஹரபுத்திரர் உடனே
உயர்விந்து மர்த்தன—சோபனம் சோபனம்.

46. மோகினியும் அந்தர்த்தான மடைந்தாள்
மோகந்தெளிந்து சிவனுமையுடனே
வாகனமான ரிஷபத்திலேறியே
வந்து கைலாஸத்தில் வஸித்திருந்தார்
முன்னே பிரும்மாவை ரக்ஷிக்கவந்தாளே
முதலாவது அந்த அவதாரம்
பின்னே இப்பொழுது சொன்னோம் மோகினிரூபம்
பின்னுங்கேள் இது (வி)ரண்டு
—சோபனம் சோபனம்

47. லலிதாதேவியுடைய மகிமை தன்னிலே
லக்ஷங்கோடியுள்ளதில் லேசஞ் சொல்வோம்
கேளும் பக்தியுடன் கேட்டவர்க்கு மங்களம்
கிட்டும் நிச்சயம் சந்தேகமில்லை
பூர்வத்தில் தக்ஷனுடைய கன்னிகையாக்கும்
பூர்வாவதாரம் பரமேச்வரிக்கு
சாம்பவர் சொல்தள்ளி தகப்பனார் யக்ஞத்துக்குத்
தாக்ஷயாயணி போனாள்—சோபனம் சோபனம்

48. தகப்பனுந்தாயும் அம்மாவந்தாயாவென்று
சொல்லவில்லை தேவி பொருத்திருந்தாள்
முப்புரமெரித்தவருடைய பாகத்தையும்
முடக்கி விட்டெக்ஞத்தைச் செய்தான் தக்ஷன்!
ஈசர்பாகத்தை முடக்கினதால் தேவி
இவன் பெண் என்பதை மாற்றவேணுமென்று
விசையாய் அக்கினியிலே மறைந்து பார்வதியாக
வேறே அவதரித்தாள்—சோபனம் சோபனம்.

49. இதைக்கேட்டு ஈசனும் தக்ஷன் தலையைக்கிள்ளி
எரித்துவிட்டெக்ஞம் நிறைவேற்றி விட்டு
வந்து இமயகிரி தடத்தில் கங்கைமுன்னே
வடமூலத்தே யோக தபசிருந்தார்.
பர்வதராஜரும் நாரதர் சொல்லாலே.
பார்வதி ருத்ராணி என்றறிந்து
பார்வதி தேவியை தகப்பனுர் ஈசர்க்குப்
பணிவிடைசெய்வித்தார்—சோபனம் சோபனம்.

50. ஸ்வாமி இப்படியாகத் தவஞ்செய்யும் போது
தாருகாஸுரன் சூரன் உண்டானுன்
ஸ்வாமியின் பிள்ளையல்லாமல் ஒருவராலும்
சாவில்லை இவர்கட்கு வரத்தினுலே
தாருகாசுரனடி பொறுக்காமல் தேவர்கள்
ஸ்வாமிமுன் மன்மதனை ஏவினுர்
வாராய் மன்மதனே தேவியோடீசரை
வாழும்படிக்குச் செய்வாய்—சோபனம் சோபனம்.

51. தேவாள் சொன்னபடி மன்மதன் பாணத்தால்
தேவதேவரைத் தொடுத்தடித்தான்
தேவர் கோபத்தினுல் பார்த்து மன்மதனைத்
தகித்துச் சாம்பலாக்கினுர் மூன்ருங்கண்ணுல்
பயந்து பார்வதியம்மன் அதைக்கண்டு ஓடிப்போய்
பர்வதராஜன் சொல்லால் தபஸிருந்தாள்
மன்மதன் சாம்பலைப் பிசைந்து விச்வகர்மா
மனித உருவஞ்செய்தான்—சோபனம் சோபனம்.

### பண்டாஸுரன் உற்பத்தியாகுதல்

52: சாம்பமூர்த்தியுமப்போ அம்ருத கடாக்ஷத்தால்
சாம்பல் பொம்மையைப்பார்த்தார் பார்த்தவுடன்
சாம்பசிவனுடைய அம்ருத கடாக்ஷத்தால்
சாம்பல் புருஷன் ஜீவனுடெழுந்தான்
விச்வகர்மா அந்தக் குழந்தையைக் கொண்டுபோய்
விருப்பத்துடனே வளர்த்த பின்பு
வேண்டிய வரங்களை அடையும் பொருட்டவன்
ஈசனைப்பூஜித்தான்—சோபனம் சோபனம்.

53. அறுபதினுயிரம் வருஷம் சாம்பிராஜ்யமும்
அவனுக்குக் கொடுத்தார் பரமேச்வரர்
மற்றுமொருவர் அவனை ஜயிக்காமல்
வரத்தையும் கொடுத்து அனுப்பிவைத்தார்
அவர் கோப அக்கினியில் உண்டான தாலிவன்
அசுரன் ஆகினுன் இதைக்கண்டு பிரும்மா
அமர சத்துருவானுன், பண்டு போல என்ருர்
ஆகையால் பேர்பண்டன்—சோபனம் சோபனம்.

54. பண்டாஸுரனிப்படி யுண்டானவுடனே
பாதாளத்தில் போன அசுராள் கேட்டு
கண்டக அஸுராள் பண்டாஸுரனைச்சேர்ந்து
கற்பித்தாள் பட்டணம் உண்டாக்கவே
மயனை வருத்திப் பண்டாஸுரன் உடனே
மஹேந்திரபுரிக்குத் தெற்குப் பக்கத்தில்
செய்யச் சொன்னுன் சோணிதாபுரத்தை மயனும்
செய்தானதை நன்ருய்—சோபனம் சோபனம்.

### பண்டாஸுரன் அரசாட்சி.

55. சுக்கிரபகவான் கொணர்ந்து கொடுத்தார் கிரீடம்
ஸிம்மாசனம் வெண்சாமரங்குடையும்
சுக்கிரன்போல் யோசனையுள்ள தப்பியான
விசுக்ரனை வலது தோளில் சிருஷ்டித்தான்
இடது தோளில் தம்பி விஷங்களை சிருஷ்டித்தான்
இன்னமொருத்தி தங்கை திமினி என்பாள்
வடிவுள்ள நான்கு பெண்டாட்டி யுண்டவனுக்கு
*வாதாபிமர்த்தனு—சோபனம் சோபனம்.

56. அஷ்டமந்திரிமார்கள் மந்த்ராலோசனை சொல்ல
அவர்களைக்கொண்டு ராஜ்யம் நடத்துகிருன்
துஷ்ட அஸுராளின் துர்புத்திகேட்காமல்
சுக்கிராசாரி நித்தம் புத்தி சொல்வார்

---

*அகஸ்தியர் வாதாபி யென்னும் அஸுரனை "வாதாபே ஜீர்ணோ பவ!" என்று தம்முள் ஜீரணிக்கச்செய்து கொன்றதால் அவருக்கு இந்தப் பெயர் வந்தது.

அதிதி பூஜை ஹோமம் சிவபூஜை நேமங்கள்
அஸுராளும் செய்கின்ருர் சுக்கிரன் சொல்லால்
மதியும் தர்மமாச்சு பண்டாசுரனுக்கு
வாழ்வு வந்தபொழுது—சோபனம் சோபனம்.

57. பண்டாஸுரனுக்கு பலநாளைக்குப்பின்பு
கெட்ட புத்திவந்து தேவர்களைப்
பிடிக்கத் துவக்கினன் வாஸவன் முதலாகப்
பிடித்துக்கொண்டுவந்து தன் கோட்டையில்
காவல் காக்கச் சொல்லிச் சேவகராகவே,
கட்டளையிட்டான் தேவர்களை
துஷ்டன் கையிலகப்பட்டு விழிக்கிருர்கள்
வில்வலாந்தகனே கேள்—சோபனம் சோபனம்.

58. தங்கட்கு வினையை தேவாள் வருத்திக்கொண்டார்
தாருகாசுரனை வதைக்கவென்றே
சங்கரரிடத்தில் மன்மதனை ஏவப்போய்
தானே வலையில் விழும்புலியைப்போல,
ஸ்வாமி தபஸிற்கு துரோகம் நினைத்ததால்
சத்துருவாகினன் பண்டாஸுரன்;
வம்பன் பண்டாஸுரனை வதைப்பதற்கு
மனதில் நிச்சயித்தார்கள்—சோபனம் சோபனம்.

59. நிர்ச்சலர்படுகிற சங்கடமறிந்து
சத்துருசம்ஹார மஹாவிஷ்ணுவும்
அச்சுதரும் மாயா சக்தியை வருத்தி
அசுரர்கள் மோகிக்கும் ரூபமதாய்
சொல்வர் மஹாவிஷ்ணு "தோழிமாயை நீயும்
துஷ்டன் பண்டாஸுரன் தர்மங்களை
ஒன்றையும் அவர்கள் செய்யாமல் மோஹிப்பித்து
உபத்திரவி போ" என்ருர்—சோபனம் சோபனம்.

60. உத்தரவாலே மாயையுந்தனக்கு
ஒப்பான எட்டுத் தோழிமாருடன்
உத்தியான வனத்திலே பண்டாஸுரன் நித்தியம்
உதயத்தில் குளிக்குங் குளக்கரையில்
பச்சைக்கல்லிழைத்த படித்தட்டின் மேலே
பாடுகிருள் மாயை வீணையுடன்

பிச்சிக்கொடி மேலே குயில் கூவினாற்போல
பெண்கொடி பாடுகிறாள்—சோபனம் சோபனம்.

61. நித்தியம் வருவது போல் மந்திரிமாருடன்
நீராடவந்தான் பண்டாஸுரனும்
சித்திராங்கியான மங்கையைக் கண்டான்
தேன்மொழியாளுட பாட்டுங் கேட்டான்.
மாய்கையை அடைந்தான் பண்டாஸுரனும்
மந்திரிமார் எட்டுப் பெண்களைச் சேர்ந்தார்
மாய்கையுடன் அவன் மஞ்சத்தில் இருந்தான்
வாழ்வு தேவர்க்காச்சு—சோபனம் சோபனம்.

62. மாய்கையாகிய மடுவில் விழுந்தான்
மறந்தான் பண்டாஸுரன் சிவபூஜையை
வருஷங்கள் அறுபதினாயிரமும் பண்டை
வரமுங் கழிந்தது நிமிஷம்போலே
குடிலாக்ஷன் முதலான மந்திரிமார்களும்
கூடினார் இவன்போலே மாய்கைகளை
அடித்துப்பறித்தாலும் ஆரோடிப்போனாலும்
அவனுக்குத்தெரியாது—சோபனம் சோபனம்

63. அந்த ஸமயத்தில் நாரதரோடிப்போய்
அமராளுக்கு நல்ல புத்தி சொல்வர்
அஸுரன் மந்தபுத்தி கண்டிந்தவேளையில்
(மகா) தேவியை ஆராதனை செய்யுங்கள்
தேவி வந்தால் உங்கள் சங்கடங்கள் தீரும்
செய்யுங்கள் தபஸைத் தாமஸியாமல்
இப்படித் தேவர்க்கு புத்தி சொல்லிவிட்டு
ஏகினார் நாரதர்—சோபனம் சோபனம்.

### தேவர்கள் அம்பிகையை ஜபத்தால் தியானித்து ஹோமஞ் செய்தல்

64. தேவமுனிசொல்ல இந்திரனுடன் கூடச்
செய்கிறார் தேவர்கள் உக்கிரதபஸை
ஈஸ்வரியை நோக்கி வருஷம் பதினாயிரம்
இப்படித்தேவர்கள் தபஞ்செய்தார்கள்

ஆகார நித்திரை விட்டெல்லா தேவர்களும்
அதிககடினமான தபஸிருந்தார்
பகவதி ஈஸ்வரியாள் இதுவரைக்கும்
பிரத்யக்ஷமாக வில்லை—சோபனம் சோபனம்.

65. அஸுர குருவும் தேவர் தப்ஸைக்கண்டு
அவருட முதல் கொள்ளை போனதுபோல்
விசையாய் வந்து பண்டாஸுரனுடன் சொல்லி
விக்கினஞ்செய்யச் சொன்னான் தேவர்கட்கு
சேதியைக் கேட்டவுடன் மாய்கையை விட்டு
சிம்மாசனத்தில் வந்து யோசித்தான்
வதஞ்செய்கிறேமென்று சேனையுடனே வந்தான்
வானவர் தங்களிடம்—சோபனம் சோபனம்.

66. வந்திங்கே பார்க்கும்பொழுது தேவரைச்சுற்றி
மாய்கையாலே ஒரு கோட்டை கண்டான்
தந்திரஞ் செய்தான் கோட்டையைப் போர்த்திடச்
சரிப்படாமலேயவன் ஓடிப்போனான்
கோட்டையைக் கண்டு பயந்திங்கே தேவாள்
கொடூரன் பண்டாஸுரன் போட்டதென்றே
சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தம்மனை
சரணமானார் தேவர்—சோபனம் சோபனம்.

67. பின்னுமந்தத் தேவர் எல்லோருமாய்க்கூடி
புத்தியால் ஒன்று நிச்சயித்தார்கள்
ஒன்று செய்வோம் தேவி ஜகத்திலே உண்டானால்
ஓடிவந்து நம்மை இரக்ஷிக்கட்டும்
இல்லையாகில் நாம் அவரவர் தேகத்தை
கணுக்கணுவாய்ச்சேதித்து ஹோமஞ் செய்வோம்
நல்லக்கினி குண்டத்தில் உடம்புகளைத் தேவாள்
நறுக்கி ஹோமஞ்செய்தார்—சோபனம் சோபனம்.

### லலிதாம்பிகையின் அவதாரம்

68 கால்முதல் தோள்வரை ஹோமஞ் செய்து தேவாள்
கழுத்துடன் குதிக்க நிச்சயித்தார்கள்!
மின்னல்மலை போல அக்கினி குண்டத்தில்
மின்னிக்கொண்டொரு காந்தியுண்டாயிற்று!

ஆச்சரியத்துடன் தேவாள்—தேஜஸைக் கண்டாள்
அதற்குள்ளே ஸ்ரீ சக்ர ரதத்தைக்கண்டாள்
அழகான ஸ்ரீ சக்ர ரதத்தின்மேல் லலிதா
அம்மனவதரித்தாள்—சோபனம் சோபனம்.

69. வானுலகத்துத் தேவாள் தாபத்தைத் தீர்த்திட
வந்து லலிதை அவதாரமாய்
பட்டுக்குடை கவிய சித்திரப்பொன்ரதம்
பளிச்சுப்பளிச் சென்று ஒளிதிகழ
ஸ்ரீசக்ரராஜ ரதத்தினில் தேவியும்
சிங்கார ரூபமாய்க் காந்தி மின்ன
ஆலவட்டம் வெண்சாமரம் போடச்சகிகளும்
அக்கினி குண்டத்தின் நடுவில் வந்தாள்.

70. பத்மராகத்தினல் இருபாதங்களிலும்
பாதஸரம் பீலி கொலுசுகளும்
ஹம்ஸம்போலே யம்மன் நடையழகும் நல்ல
யானைத்துதிக்கைபோல் துடையழகும்
சிவந்த பீதாம்பரம் உடுத்தபின் தட்டும்
சிறுத்த இடையில் ரத்தினமேகலையும்
நவநீதம்போன்ற தொப்புள் சின்ன உதரத்தில்
அழகாய் மும்மடிப்புடன்—சோபனம் சோபனம்.

71. தாமரை மொட்டுப்போல் தளதளென்று இரு
ஸ்தனங்களும் சரப்பளி முத்துஸரம்
கமுகு சங்குபோல கழுத்தும் ஜவந்திவகை
கட்டிய மாலைகளும் நான்குகையும்
நவரத்தினமிழைத்திட்ட வளையுங் கொலுஸுடன்
நாலுகையில் கணையாழி மின்ன
நவக்கயிறும் கரும்பும் தூரட்டியும் புஷ்பமும்
நான்கு கையிலுமுண்டு—சோபனம் சோபனம்.

72. பவளம்போல் உதடும் குருக்கத்தி மொட்டுப்போல்
பல்லுகளின் ஒளி காந்திகளும்
கருநீலப் புஷ்பம்போல் விழியும் தாழம்பூப்போல்
காதுகளும் விற்போல் புருவங்களும்
அழகும் சம்பக மொட்டுப்போல் மூக்கு நத்தும்
புல்லாக்கும் கண்ணுடிபோல் கன்னங்களும்

இருகாதில் ஓலேகுண்டலம் வாளிமுதலாய்
இலங்கும் சந்திரமுருகும்— சோபனம் சோபனம்.

73. அர்த்தசந்திராகார நெற்றியில் சிந்தூரம்
அதி சிவப்பாம் மூன்ருங்கண்ணதுபோல்
அர்த்தசந்திரக் கலேயும் சுட்டிராக்கோடியும்
அழகு நீலமான கேசத்தின்மேல்
சிந்தாமணி ரத்தினத்தாலே கிரீடம்
சிரஸிலே தரித்துக்கொண்டிருக்கா ளம்மன்
சந்தனங் கஸ்தூரி புனுகு பூமாலேயும்
தரித்து மாதா வந்தாள்—சோபனம் சோபனம்.

74. மண்டல பால அரக்கன் போலம்மன் வர்ணமும்
வளமுள்ள சந்திரகாந்தி சீதளமும்
கண்டவுடன் தேவியை கைகூப்பித் தேவர்கள்
கனகத்தடிபோல் விழுந்து பணிந்தார்கள்!
தேவர்களுடைய தேகரணத்தைக்கண்டு
ஸ்ரீலலிதை மெத்த இரக்கத்துடன்
அவ்வளவு பேரையும் அம்ருதக்கண்ணுல்பார்த்து
அங்கக்குறைகள் தீர்த்தாள்—சோபனம் சோபனம்

75. திடமான தேகத்தை அடைந்தார்கள் தேவர்கள்
தேவியுடைய கிருபை அனுக்கிரகத்தால்
அடிக்கடி நமஸ்கரித்து விட்டுக்கீர்வாணர்
அஞ்சலி பண்ணிஸ்துதி செய்கிருர்
ஓம் நமோ நாராயணியே பகவதி
உம்மைத்துதி செய்கின்ருேம் அதிதிபுத்திராள்
இன்றுபோல் எங்களுட.ஆபத்தெல்லாந்தீர்த்து
என்றும் எங்களே ரக்ஷி—சோபனம் சோபனம்.

76. மூன்றுலகங்களேயும் நான்கு வேதங்களேயும்
முழுவதையும் பெற்றமாதா நீரே
வானுலகமும் ஸர்வ ராஜ்யாதிகாரமும்
வரமும் சாம்பிராஜ்யமும் கொடுப்பது நீர்
ஏழுவகை பேதத்தின் எண்பத்திநான்கையும்
இரக்ஷிக்கும் தாயாரும் நீரேயம்மா
சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தோம் உமது
சரணம்புஜங்களில்—சோபனம் சோபனம்.

77. அதலவிதலரஸாதல சுவர்க்கங்களிலும்
அம்பிகையின் தேக ஒளிகள் வீச
சுதையும் ஸுதாவுடன் அளகேசன் அக்கினி
ஸுரர்கருடர் கின்னரர் சித்தர்களும்
ஹரிபிரும்ம ஈசருடன் எல்லாம் உனது ரூபம்
யாராலே ஸ்தோத்திரம் செய்து முற்றும்
லேசம் சொன்னோம் மகிமை லக்ஷங்கோடியுள்ளதில்
லலிதைக்கு நமஸ்காரம்—சோபனம் சோபனம்.

லலிதாம்பாள் தேவர்களுக்கு அபயம் அளித்தல்

78. ஸ்துதியாலே மெத்தமனங் குளிர்ந் தீஸ்வரி
சொல்லுவாள் திரும்பவும் கீர்வாணர்க்கு
இன்று முதல் பயத்தைத் தூரவிட்டு விடுங்கள்
இந்தப் பண்டாஸுரன் நமக்குப் பஞ்சு
அரை நிமிஷத்தில் பண்டாஸுரப் புழுவை
அக்கினி எரித்தாற்போல் வதைத்திடுவோம்
ஒருவாக்கிற்கு மறுசொல்லில்லை நமக்கு
உங்கட்கே மங்களம்—சோபம் சோபனம்.

லலிதாம்பாள் கல்யாணம்

79. அம்மனும் அவதார மானதையறிந்து
அப்போது பிரம்மா விஷ்ணு ருத்ரன் வந்தார்
மும்மூர்த்திகளுடன் முனிவர்கள் கந்தர்வர்
கின்னரர் கிம்புரருடர் அப்ஸரஸும்
வைரவர் க்ஷேத்ரபாலர் கந்தன் கணபதி
எட்டுத்திக்குப் பாலரும் சக்திகளும்
வாராகி சாமுண்டி மாதங்கி முதலேழு
மாதாக்களும் வந்தார்—சோபனம் சோபனம்.

80. சகலரும் வந்து லலிதாதேவியுடைய
சன்னதி நிரம்பி இருந்தார்கள்
மஹாதேவியை நமஸ்காரஞ்செய்துவிட்டு
வாழ்த்தி ஸ்துதித்துக்கொண்டிருந்தார்கள்
நான்முகர் ஆக்ஞையால் தேவிக்கு மண்டபம்
நல்ல சிற்பி விஸ்வகர்மாவினுல்
ராஜேஸ்வரிக்கு இசைந்தாப்போலவே கிரகம்
நிர்மாணஞ்செய்துவைத்தார்—சோபனம் சோபனம்.

81. அம்மன் கிருபையாலே விஸ்வகர்மாவும்
அழகான புரங்களும் சபைகளுடன்
சிந்தாமணி ரத்னம் பளபளவென்று மின்ன
சிம்ஹாஸனம் உண்டுபண்ணி வைத்தான்
பட்டண அமைப்பையும் அம்மன் தன் அழகையும்
பார்த்துப் பிரம்மதேவர் யோஜிக்கின்ருர்
நாட்டுக்குப்பதியான அம்மனுக்கிப்போ
நாயகர் வேண்டுமே—சோபனம் சோபனம்.

82. தேவிக்குக் கணவனுர் ஈசர் அல்லாமல்
ஜகத்திலே வேறே ஒருவரில்லை
அவருக்கோ ஆனுல் சுடலையில் இருப்பு
அரவமும் எலும்புமே ஆபரணம்
சாம்பலும் பூசி சடையுந்தரித்து
தலைமண்டை யோட்டையுங் கையிற்கொண்டு
அம்பலத்தாடினுர் இவருக்குக் கணவராய்
ஆகுவதெப்படி—சோபனம் சோபனம்.

83. இப்படி பிரம்மா மனதிலெண்ணியதை
ஈசர் அறிந்து நல்ல ஒளியுடனே
முப்பதுகோடி மன்மதாகார ரூபமாய்
வேஷந்தரித்ததி ஸௌந்தரமாய்
மகுடகுண்டலத்துடன் அழகு பீதாம்பரமும்
மார்பில் சந்தணம் முத்துமாலையுடன்
மோகன வேஷம் தரித்திந்தப்படி தேவி
முன்னே நின்ருரீசன்—சோபனம் சோபனம்

84. நின்ற நிலையில் அதிஸௌந்தரமான
லலிதாதேவிக்கு இசைந்த அழகும்
என்றும் பதினுறு வயதுந்தரித்துக்கொண்டு
இருக்கின்ற ஈசரைக்கண்டு பிரம்மா
காமேஸ்வரரென்று பேருமிட்டவருக்கும்
கண்ணுட்டி லலிதேஸ்வரி தேவிக்கும்
ஓமென்று இவர்கள் இரண்டுபேருக்கும் இப்போ
விவாகஞ் செய்யலாமென்ருர்—சோபனம் சோபனம்.

85. கமலாசனருடைய ஆக்கினையால் விஸ்வ
கர்மாவும் மயனும் இருபேருமாய்

வெ௩:417
X167

கமனீயமாய் ஸ்வர்ண ரத்னங்களாலே
கலியாண மண்டபம் உண்டாக்கினர்
வாழை கமுகு கரும்பு பூச்சரங்களும்
வாடாதமாலையும் நிறைத்தார்கள்
கொழுந்துபிச்சி மரு குடமல்லி இருவாக்ஷி
கோலாஹலம் செய்தார்—சோபனம் சோபனம்.

86. சோடித்துக் கலியாணத்துக்கெல்லாம் பிரும்மாவும்
கோவிந்தருடைய சம்மதத்தாலே
ஒடுக்க வணக்கமாய் அம்மனைப் பார்த்து
உம்மைக்கணவருடன் பார்ப்போமென்றார்
மாதாவும் தன்னுடைய கழுத்திலிருந்தொரு
மாலையைக் கழட்டிக் அம்பலத்தில் போட்டாள்
நாதர் காமேஸ்வரர் கழுத்திலந்தமாலை
ராஜியாய் சேர்ந்தது—சோபனம் சோபனம்

87. கீர்வாணர் வாத்தியம் பதினெட்டும் முழக்கினர்
கீர்வாணர் புஷ்ப வருஷஞ்சொரிந்தார்
ஊர்வசி முதலானோர் நர்த்தனஞ்செய்தார்கள்
உடனே கல்யாண வேஷம் தரித்தாள்.
ஈசருந்தேவியும் மாலையிட்டார்கள்
இருவரும் இருந்து கன்னூஞ்சல் ஆட
வாஸுதேவராலே உமையவளைத்தாரை
வார்க்கச்சொன்னர் பிரம்மா-சோபனம் சோபனம்

88. பத்மாஸனர் சொல்லால் முகூர்த்தத்தில்
பரிமளிக்கும் தேவசபை நடுவே
பத்தினியுடன் கூட விஷ்ணுகாமேசருக்கு
பக்தியாய் மதுவர்க்கந் தான்கொடுத்தார்
காமேஸ்வரருக்கு லலிதேஸ்வரியை
கன்னிகாதானம் செய்தார் மகாவிஷ்ணுவும்
காமேஸ்வரரும் திருமங்கல்ய தாரணம்
கட்டினர் லலிதைக்குச்—சோபனம் சோபனம்.

ARCHIVES LIBRARY 109463

89. நெய்யால் ஹோமஞ்செய்து பாணிக்கிரகணஞ்செய்து
ஈசர் அம்மனை அம்மி ஏற்றினர்
மெய்யாக அக்னியை மூன்று தரஞ்சுற்றி
முக்கண்ணர் பொரியினல் ஹோமஞ்செய்தார்

காமேஸ்வரரும் லலிதேஸ்வரியைத்தான்
கலியாணஞ்செய்துகொண்டார் ஸுகமாய்
பூமிமுதல் மூன்று லோகத்தவர்களும்
புகழ்ந்தார்கள் அகஸ்த்யரே-சோபனம் சோபனம்.

90. காமேஸ்வரருக்குங் காமேஸ்வரிக்கும்
கரும்பு வில்லுக்களைக் கொடுத்தார் பிரும்மா!
பூமிசர் விஷ்ணுகொடுத்தாருடனே
புஷ்ப பாணங்களை இருபேருக்கும்
வருணன் கொடுத்தான் பாசம் விஸ்வகர்மா
வாழ்த்திக்கொடுத்தான் இரண்டு துரட்டிகளை
உறங்காமல் அக்னி வாயுவுங்கொடுத்தார்கள்
ஒளியான அஸ்திரங்கள்—சோபனம் சோபனம்

91. அவரவராலேயான அஸ்திரங்களை
அம்பிகை முன் வைத்தார் அமரரெல்லாம்
கலியாணம் ஆனபின் ஸாம்பிராஜ்ய அபிஷேகம்
காமேசருக்கும் காமேஸ்வரிக்கும்
பட்டாபிஷேகத்தைச் செய்தார் தேவரெல்லாம்
பரிபாலனஞ் செய்து ரக்ஷிக்கவே
பட்டணப்ரவேசத்துக்குப் புஷ்பவிமானத்தை
பத்மாஸனர் செய்தார்—சோபனம் சோபனம்

92. பதினெட்டு வாத்தியம் மத்தளம் தாளங்கள்
பாட்டுப்புல்லாங்குழல் கேளிக்கையும்
மதயானை குதிரையும் கொடியால வட்டமும்
வரிசையாய் முனிவரும் ஸ்தோத்தரிக்க
சோடித்து அம்மனையும் காமேஸ்வரரையும்
கோஷித்து விமானத்திலேத்திவைத்து
கோஷமாய் தெருவீதி வரும்போது ஹாரத்தி
கோதையர் எடுத்தார்கள்—சோபனம் சோபனம்

## தேவி பண்டாஸுரன்மேல் யுத்தத்திற்குப் புறப்படுதல்

93. ராஜக்கிரகத்தில் வந்து சிம்ஹாசனத்தில்
நாரதரோடு கூட இருந்தாள் தேவி
பசித்த பேர்க்கெல்லாம் அபீஷ்டவரங்களைப்
பார்த்துக்கொடுத்தாள் அமிருதக்கண்ணால்

காமாஷி என்ற பேர் கொடுத்து பிரம்மதேவாள்
காத்திருந்தாள் பதினயிரம வருஷம்
தேவியின் சந்நதியில் தேவாள் காத்திருப்பதை
தேவியிடஞ் சொன்னர்—நாரதர் சோபனம்.

94. ஸுரமுனிவேண்டுதலால் தேவர்கிரகங்களுக்குச்
சொல்லியனுப்பினள் அம்பிகையும்
வரத்தாலே மதங்கொண்ட பண்டாஸுரனேயினி
வதைக்க வேணுமென்று ஈஸ்வரியாள்
ரதகஜ துரக பதாதிகளுடன் கடல்
அலைபோல வருகின்றுள் சேனையுடன்
சதுரங்கமான சக்தி சேனைகளுடனே
சங்கரி வருகிருள்—சோபனம் சோபனம்.

95. ஸ்ரீசக்ர ராஜரதத்திற் கொன்பதுதட்டு
சிங்கார உருளைகள்: நான்கு வேதம்
பூஜ்யமான தர்மார்த்த காமகோக்ஷம்
புனிதமான நான்கு குதிரைகளாம்!
ஆனந்தக்கொடிமரம் அதற்கு மேலழகாய்
ஐந்து யோஜனையகலம் முத்துக்குடை
முந்நூறு தேர்படை முழுதுஞ் சக்திகள் வாராள்
முழுத்தேரும் தேவிக்குச்—சோபனம் சோபனம்.

96. அம்மன் தொரட்டியில் இருந்துமொரு தேவி
சம்பத்கரி என்று உண்டானுள்
நன்மையாகவே யின்னும் அச்வாருடை யுதித்தாள்
நாகபாசத்திலே உண்டாகி
யானைகள் சம்பத்கரிக்குச் சேனையாம்
அச்வாருடைக்குக் குதிரைகளாம்;
தாயார் மந்திரிணியுடைய ஸ்ரீசக்ரத்தில்
தட்டுக்களேழுண்டு—சோபனம் சோபனம்.

97. மந்திரிணி தேரிலும் ஸ்ரீசக்ரம்போலவே
மகாசக்திதேவிகள் நிறைந்திருக்காள்
விந்தையாய்ப் பதினறு நாமத்தால் தேவர்கள்
மந்திரிணியை ஸ்தோத்திரங்கள் செய்தார்
சியாமளையுடைய திருக்கையில்ருந்து
தானும்பாணத்தோடொரு கோதண்டத்தை

நமஸ்கரித்தம்மனிடம் வாங்கியே மந்திரிணி
நாயகி வருகிருன்—சோபனம் சோபனம்.

98. தீர்க்கதண்டநாதை ஸ்ரீசக்ரதேருக்குத்
திட்டமாக ஐந்து தட்டுக்களும்
கர்க்கிகளான துர்க்கைகளும், அக்கினி
துர்க்கைகளும் வன துர்க்கைகளும்,
தர்க்கமில்லா நல்லவர்க்கங்களான ரண
அர்க்கிகளும் மிக நிஷ்களமாய்
அர்க்கவர்ணிகள் பல வர்க்கங்களால் எங்கும்
எக்காலும் தற்காப்பாள்—சோபனம் சோபனம்.

99. வாராகி தேரிலும் சக்திகள் இருக்கின்ருர்
வாராகி போன்ற பராக்கிரமமாய்
கோரமஹிஷம் மிருகம் சிம்ஹம் யாளிமேல்
கூட வருகிருர் சக்திகளும்
தண்டெடுத்துவரும் வாராகியைப்போற்று
அப்ஸரஸ்திரீகளும் தேவர்களும்
கண்டு பன்னிரண்டு நாமத்தால் வாராகியைக்
கைகூப்பி ஸதுதிக்கின்ருர்—சோபனம் சோபனம்.

100. இருபத்தைந்து நாமத்தாலே ஸ்ரீதேவியை
எல்லாத்தேவாளும் ஸ்துதி செய்கின்ருர்
ஒருவருக்கும் சொல்லக்கூடாது இதுகளை
உனக்குச் சொன்னேம் தன்யன் ஆனதினுல்
இன்னுங்கேள் சொல்லுவோம் இனிமேற்ருன்
யுத்தங்கள்
இப்படி ஜகன்மாதா வருகின்ருள்
பின்னுஞ்சக்தி சேனை வருகின்றதைக்கேட்டால்
பில்லி சூன்யந்தீரும்—சோபனம் சோபனம்.

101. குந்தம் ஈட்டிவாள் பரசுபட்டயம் கத்தி
கோடாலி வில்லம்பு உலக்கைகளும்
மந்திரவாள் சூலம் கலப்பை முசலத்துடன்
வட்டக்கத்திகள் வெட்டுக்கத்திகளும்
வஜ்ஜிரஞ்சமுதாடு கதைகள் பல்லயமும்
பாணம் பாபம் சக்ராயுதமுங்கொண்டு
வஜ்ஜிரமாகிய மந்திரிணி வாராகி சேனையும்.

, வருகின்றதிப்படிச்—சோபனம் சோபனம்
வ்ருகின்றதிப்படிச்—சோபனம் சோபனம.

02. பச்சைவர்ணி கீறுபச்சை வர்ணி பொது
பிச்சித்தொங்கல் வர்ணி, மஞ்சள் வர்ணி
முச்சந்திவர்ணி, முழுதும் நீலவர்ணி
மிச்சமுள்ள ஐந்து வர்ணிகளும்
துர்க்கை பிடாரியும் சடைச்சிகளும்
துய்ய வடிவுள்ள கேசிகளும்
கர்க்கியும் காளியும் இனங்கோபாளியும்
காளமேகம் வராள்—சோபனம்.

103. பத்ரகாளிகள், ரணபத்ரகாளிகள், வீர
மர்த்தன காளிகள் ருத்ரகாளிகளும்
நெற்றியில் நெருப்புக்கள் உள்ள காளிகளும்
சுற்றி வட்டமாய் வந்துறுமிக்கொண்டு
அஷ்ட நாகங்கள் அவர்களுக்காபரணம்
அல்லாமலும் ரத்னக்ரீடமுதல்
பட்டையரைஞாண் ஒட்டியாணஞ் சலங்கைமுதல்
பணிகளும் அவர்க்குண்டு—சோபனம் சோபனம்.

104. கையில் முறுக்குவளை கணையாழி மோதிரம்
சனத்தகொங்கைக்கவசமும் சரப்பளியும்
துய்யவர்ணப்பட்டு துலங்கும் தோடுந் தக்கை
சோபிதமாய்த் தொங்கும் முருகுமுதல்
சந்திரப்ரபை சூர்யப்ரபை தலையில் பின்னல்
சதுரான ராக்கோடி குஞ்சலமுங்கொட்டை
சிந்தூர சக்திகள் சுபசகுனங்கண்டு
தொகைதொகையாய் வாராள்—சோபனம் சோப.

105. இன்னமுண்டு வைரவாள் பூதகணங்கள்
இந்தச்சேனை எண்ணத்தொகைகள் இல்லை
சொன்னேமின்னம் இவர் வாகனங்களைக்கேள்
தொகையில்லாத் தேர்களும் யானைகளும்
வாயுவேகமான வேகக்குதிரைகளும்
ஆயிரங்கோடி சிம்ஹவாகனமும்
வாயுகருடனெக்கும் பூதங்கள் முதலாய்
வாகனங்களில் வாராள்—சோபனம் சோபனம்.

106. ஆலவட்டம் வெண்கத்தி குடைகள்கொடிகள்கொண்டு
அஸுராள் மேல் கோபிஷ்டைகளாக
கோலாகலமாய் யுத்த பேரிவாத்தியம் முழங்க
கொடிபறக்க அணியணியாம் வாராள்
தேவ வாத்தியம் முழங்க கந்தர்வர் கானம் பண்ண
தேவதாஸிகள் நாட்டியமாடிவர
தூயமுனிவர் மலர்சொரிய லலிதேச்வரி
சுகத்துடன் வருகிருள்—சோபனம் சோபனம்

107. தேவி யுத்தத்திற்கு வருகின்றதைக் கேட்டு
திடுக்கிட்டுப் பண்டர்ஸுரன் சபையில்
கோபத்துடனே சிம்ஹாசனத்திலிருந்து
கூடிய அஸுராளோடு யோஜித்தான்
இடிபோல் அட்டகாஸஞ் செய்தான் கோட்டைவாசல்
எல்லாவற்றிலும்காவல் வைக்கஞ்சொன்ஞன்[கள்
குடிலாக்ஷன் மந்திரியை யுத்தத்திற்கனுப்பினுன்
கோபிஷ்டை லலிதையுடன்—சோபனம் சோபனம்

108. அஸுரபதியுடைய வார்த்தையைக்கேட்டு மந்திரி
அதிகஸைன்யஞ் சேனுதிபதிகளுடன்
இசைந்து நாற்பது அக்ஷௌகிணிசேனைகளைக்
கொண்டு
எல்லா வாசல்களையும் காக்கச் சொன்ஞன்
துர்மதனை யுத்தத்திற்குப் போகும்படிக்குச்
சொல்லியனுப்பினுன் சேனையுடன்
துர்மதனை சப்பத்கரியம்மன் வதைத்து
நிர்மூலமாக்கினுள்—சோபனம் சோபனம்

109. உரண்டிசம்பத்கரியால் உருண்டான் துர்மதனென்று
மருண்டு வந்தஸுரர்கள் முறையிட்டார்கள்
வெகுண்டு பண்டாஸுரன் குண்டனையனுப்பினுன்
உருண்டான் அவனும் அச்வாரூடையாலே
புரண்டான் குரண்டனென்று தப்பி ஓடிவந்தபேர்
மருண்ட பண்டனிடம் மிரண்டு சொன்ஞர்
கரண்டி எண்ணையைக்காய்ச்சி
வரண்டிப்புண்ணில் விட்டாற்போல்
கலங்கினுன் பண்டனும்—சோபனம் சோபனம்

110. கரங்கர் முதலைந்து சேனுபதிகளையும்
துரங்காதி சேனையோடனுப்பிவைத்தான்
கடுவிஷமாயையை சர்ப்பேணிப் பிசாசையும்
துரங்கனேடுகூட அனுப்பிவைத்தான்
பாவி சர்ப்பேணி அஸுரன் ஆக்கினையாலே
பாம்புகளைப் பெற்ருள் தன் தேகத்தால்!
ஏவினுள் பாம்புகளைச் சர்ப்பேணி சக்திகள்மேல்
எல்லாசக்திகட்கும் ஜயம்—சோபனம் சோபனம்.

111. விதவித சர்ப்பங்கள் விஷத்தைக் கக்கிக்கொண்டு
விழுந்ததுகள் சக்தி சேனையின் மேல்
இதைக்கண்டு நகுலியம்மன் கருடன் தோளில்
இருந்ததி வேகமாய் ஓடிவந்து
பாம்புக்கு மிருத்யுவாம் கீரிப்பிள்ளைகளை
பல்லுகளிலிருந்து விழவடித்தாள்
அம்மெட்டுப் பாம்பையும் துண்டமிட்டதுகள்
அம்மன் கீரிப்பிள்ளைகள்—சோபனம் சோபனம்.

112. சீறிக்கொண்டு கீரிப்பிள்ளைகள் ஒன்ருய்க்கூடி
சேனையானை குதிரை அஸுராள்மேலே
ஏறிப்பிடித்துக் கடித்தக்ஷௌகிணிகளை
எல்லா அஸுரப்பேயை நொறுக்கித்துக்கள்
ஐந்து கரங்கர் கழுத்துக்களையும்
பிஞ்சுபோல் நறுக்கினுள் நகுலேஸ்வரி
அஞ்சாத நகுலிக்கு அங்கே தேவிமணியம்
அம்மன் மந்திரிணிஈந்தாள்—சோபனம் சோபனம்.

113. இவர்போனபின்பு பண்டாஸுரனனுப்பினுன்
ஏழு பிலாஸ்கரர் மந்திரி ராணுவமும்
அவர் கண்ணில் சூரியனை வருத்தி வரத்தாலே
அம்மன் சேனையை ஸ்தம்பிக்கச் செய்தான்
பிலாஸ்கரர் ஸ்தம்பனத்தைக் கண்டு தேவியின்
ஆக்கினையால் தண்டணி விசையாய் வந்தாள்
குருடாக்கி முன்னேழு மந்திரி தலைகளைக்
கொய்து மாலை தரித்தாள்—சோபனம் சோபனம்.

114. மடிந்தார் மந்திரி என்று கேட்டுப் பண்டாஸுரன்
வந்து தம்பிமார்களுடன் யோசித்து

குடிலாக்ஷனை பின்னுஞ் சேனையோடனுப்பினுன்
கொட்டிப் பெரிய யுத்தம் பண்ணச்சொன்னுன்
லலிதையைப் பிடித்துக் கொண்டு வரச்சொல்லி
ஒளித்தனுப்பினுன் தம்பி விஷங்கனையும்
களவுசெய்யச் சொன்னுன் பதினைந்தஸுராளுடன்
காமேஸ்வரிக்கு ஜயம்—சோபனம் சோபனம்.

115. அஸ்தமித்த பின்னே மலகன் முதல்பதி
னைந்து அஸுராளோடே மெள்ளவந்து
சுற்றிலும் பதினைந்து அக்ஷௌகிணியால் தேரை
சுத்தி வளைந்துகொண்டான் விஷங்கனப்போ
தேரின் முதல் தட்டில் இருக்கின்ற சக்திகள்
தேவிக்கு முறையிட்டு அலறினுர்கள்
கோரமாய் குடிலாக்ஷன் யுத்தஞ் செய்கின்ருன்
குறைவில்லை லலிதைக்குச்—சோபனம் சோபனம்.

116. பின்னே கள்ளர் வந்து செய்யுங் கலகத்தைப்
புரட்டுச் செய்கையை தேவியறியாமல்
முன்னே தண்டநாதை செய்கின்ற சண்டையின்
வேடிக்கை பார்த்தம்ம ணிருந்துவிட்டாள்
துரோகி விஷங்கன் ஒரு பாணத்தால் தேரில்
துலங்குங் கொடிதன்னை அறுத்துவிட்டான்
வேகமாய் புருவங்களை அம்மன் கோபத்தால்
வில்லுப்போல்வளைத்தாள்—சோபனம் சோபனம்

117. மாதா முகத்தினுட கோபத்திலிருந்த
மானிகள் பதினைந்து காமேஸ்வரிகள்
பாதக அஸுரனைக் கொல்ல அம்மனனுப்ப
புறப்பட்டாள் ஜ்வாலா மாலினிமுதல்
மலகன் முதற் பதினைந்தஸுராளையும்
வந்த சேனையைக் கொன்ருள் காமேஸ்வரிகள்
மெலிந்த விஷங்கனை கொல்லாமல் துரத்தியே
லலிதையின் முன்வந்தார்—சோபனம் சோபனம்.

118. குடிலாக்ஷனையும் துரத்தினுள் வாராகி
கூடவந்த அஸுராளைக் கொன்ருள்
விடியற்காலங்கண்டு விஷங்கன் செய்ததுகளை
விசையாய் மந்திரிணி தண்டநாதையுமாய்

அம்பாளிடத்தில் சொல்லி ஜ்வாலாமாலினியாலே
அக்கினி கோட்டையைப் போடச் சொன்னுள்
தென்புறம் வீதியொரு யோஜனை வாசலில்
ஸ்தம்பினியும் காவல்—சோபனம் சோபனம்.

119. முப்பது யோஜனை உயரமுள்ள கோட்டை
முழுதும் நூறு யோஜனை சுற்றளவு
இப்படி ஸ்ரீ சக்ரத்தேருஞ் சேனையுங்கொண்டு
இருக்கின்ருர் சக்திகள் தீக்கோட்டைக்குள்
தம்பியும் மந்திரியும் தப்பிவந்ததையும்
சலியாத தீக்கோட்டை மகிமைகேட்டு
அன்பாய் முப்பது பிள்ளைகளைப் பண்டன் சண்டைக்கு
அனுப்பினுன் தேவிமேல்—சோபனம் சோபனம்.

லலிதாகுமாரியாகிய பாலாம்பிகையால்

பண்டபுத்திராள் வதம்

120. பண்டபுத்ராள் சண்டைக்கு வந்ததைக்கண்டு
பாலாம்பாளைத் தேவியனுப்பிவைத்தாள்
கண்டித ரதத்தினில் ஏறிக் கொண்டு வந்தாள்
தண்டினி மந்திரிணி துணையாய் வந்தாள்
பண்டபுத்ராளையும் வந்த அஸுராளையும்
கண்டங்கண்டமாய்ச் சேதித்துத்துண்டமிட்டாள்
மண்டலம் புகழ்த் தேவாள் புகழ் மாலை
மாதா அருகில் வந்தாள்—சோபனம் சோபனம்.

விநாயகமூர்த்தியால் விக்னயந்திரமழிதல்

121. பாலாதேவி கையால் பிள்ளைகள் மாண்டதைப்
பண்டன் கேட்டுப்புலம்பி அழுதான் மெத்த
கொலைபாதகன் விக்னயந்திரஞ் செய்யச்சொல்லி
கொடூரன் விசுக்கிரனை அனுப்பிவைத்தான்
துஷ்டவிசுக்கிரன் அக்கினிக் கோட்டையில் வந்து
சுற்றி உள்ளே போகமாட்டாதே
கெட்டவன் பாறையில் எட்டுத் தேவதையந்திரம்
கீறி ஏவினுன் கேளும்—சோபனம் சோபனம்

122. யந்திரத்தால் சக்திகள் புத்தி மயங்கியே
எல்லாரும் ஸ்தம்பித்து இருந்தார்கள்

தண்டினி மந்திரிணி அம்பாளிடத்திற் சொல்ல
மாதாவுங் காமேசர் முகத்தைப் பார்த்தாள்
சக்தி கணபதி சுத்த லக்ஷணத்துடன்
திடுமென்று குதித்து வந்து யந்திரத்தை
குத்தித்தன் கொம்பாலே தூளாய்ப் பறக்க விட்ட
குஞ்சர முகருக்குச்—சோபனம் சோபனம்.

123. காதாலேழுகோடி சேனைகளையும்
கணபதியுமப்போ உண்டாக்கி
அதிபதியாறு சேனுபதிகளையும் சிருஷ்டித்து
அந்த விசுக்கிரன் சேனைகளை
அடியோடு வதைத்து அவன் சேனுபதியாம்
யானை முகாஸுரனையும் வதைத்தார்
அம்பாள் வரங்கொடுத்தாள் கணபதிக்கப்போ
அனைவரும் பூஜிக்கச்—சோபனம் சோபனம்.

**பண்டாஸுரன் தம்பிகள் இருவரின் வதை**

124. சக்திகளுக்குமப்போ புத்தி தெளிந்தது
தமையன் முன் ஓடிப்போனுன் விசுக்கிரன்
பித்தன் பண்டாஸுரன் விசுக்கிர விஷங்கனை
பின்னுமனுப்பினுன் ஜயிக்கச்சொல்லி
இருவரும் நானூறு அக்ஷௌகிணி சேனையுடன்
எல்லாச் சேனுபதியுங் கூட்டிக்கொண்டு
ஆடம்பரமாய் அக்னிகோட்டை வாசலில் வந்தார்
அந்தச் சக்திகளுக்குச்—சோபனம் சோபனம்.

125. விஷங்கனுடெதிர்த்தாள் மந்திரிணியும் பொல்லா
விசுக்கிரனை எதிர்த்தாள் வாராகி தேவி
அச்வாரூடை முதலானபேரெதிர்த்தாள்
அந்த சேனைகளக்ஷௌகிணிகளையும்
வஞ்சக விசுக்கிரன்பாண வருஷத்தால்
வாடி மெலிந்து சக்தி சேனைகளும்
அம்பாளின் சேனைகள் அஸ்திரத்தின் தாபத்தால்
அம்மனை வேண்டினுர்—சோபனம் சோபனம்.

126. மந்திரிணி உரையாலே வாராகி சிந்துவை
சக்திகள் தாபந்தீர அழைத்தாள்

வந்து சொரிந்தது சுத்த கங்கா தீர்த்தம்
வாரணத்துதிக்கைபோல் இரண்டு சாமம்
வேண்டியமட்டும் குடித்தே சக்திகளெல்லாம்
வெகு தாகந்தீர்ந்து பலமடைந்து
தேகக்களைகள் தீர்ந்து சக்திசேனைகளெல்லாம்
ஜயத்துடன் எதிர்த்தார்கள்—சோபனம் சோபனம்.

127. வந்த அக்ஷௌகிணி தனில் ஒன்றரைப் பங்கையும்
மந்திரிணி வதைத்தாள் விஷங்கனையும்
சீறிக்கொண்டு வதைத்தாள் மற்றொன்றரைப்பங்கை
வாராகி வதைத்தாள் விசுக்ரனையும்
வந்து சேனைகளின் மற்ற ஒருபங்கையும்
மாருண்டிட வதைத்தாள் அச்வாரூடை
அறிந்துகொள்ள மூன்றுநாள் யுத்தமுடிந்ததினி
அம்மனுக்கே ஜயம்—சோபனம் சோபனம்.

பண்டாஸுரன் யுத்தத்திற்கு வருதல்

128. சேனுபதிகள் முதல் தம்பிகள் வரைக்கும்
செலவாய்ப் போனதைக்கேட்டு பண்டாஸுரன்
மானங்கெட்டவன் இன்னும் பின்னதி கோபமாய்
மாஹேஸ்வரியை வைது திட்டிக்கொண்டு
கடித்துக்கொண்டான் பற்களையும் உதட்டையும்
கண்களிலே அனல்பொறி பறக்க
குடிலாக்ஷனைப்பார்த்து ஆக்கினை செய்கின்ருன்
கும்பக்குழந்தாய் கேள்—சோபனம் சோபனம்.

129. கேளாய் குடிலாக்ஷா லலிதை யென்பாளொருத்தி
கேடுசெய்தாள் நமக்கினியவளை
வாளாலே லேசுலேசாகவே கொய்கிருேம்
வரவிடுவாய் என்றன் சேனையெல்லாம்
முன்கோட்டை வாசலில்காக்கும் சேனையைத்தள்ளி
மிச்சம் மீதியாயுள்ள சேனையெல்லாம்
பெண்கள் தவிர மற்றப் பேர்களும் புறப்பட்டார்
பெண்கொடி லலிதைக்கு—சோபனம் சோபனம்.

130. கழுதைகட்டின தேர்கள் குதிரைகட்டின தேரும்
கடுவாய் கரடிசிம்மம் ஒட்டைமுதல்

கழுகுக்கொடி கோழி காக்காய் பருந்துமுதல்
கரும்பன்றி செந்நாய்கள் பாம்புகளும்
பூதப்பிரேத பேதாள வாகனத்திலும்
பின்னும் அனேக வாகனங்களிலும்
விதவிதமாயாயுதங் கொண்டு வருகின்றான்
விச்வேச்வரிக்கு ஜயம்—சோபனம் சோபனம்.

131. இரண்டாயிரத் திருநூற்றைம் பத்தஞ்சக்ஷௌகிணி
சேனைகள் தன்னை நடத்திக்கொண்டு
பண்டாஸுரனுந் தேரிலேறியே புறப்பட்டான்
அபசகுனங்கண்டான் அஸுரனங்கே
முன்பூமி நடுங்கிற்று ஆகாயத்திலிருந்து
முன்விழுந்தது ரத்தஞ் சோனையாக
கொம்பானைகளுடைய கொம்புகள் முறிந்தது
குலநாதைக்கே ஜயம்—சோபனம் சோபனம்.

132. எந்த உற்பாதமும் எண்ணாமல் வருகிறான்
இலவம்பஞ்சு காற்றில் பறக்கின்றாற்போல்
பொல்லாத காலத்தால் பண்டாஸுரன் சேனை
புறப்பட்ட தம்மனை ஜயிக்கவென்றே
துஷ்டப்பண்டாஸுரன் வருவதைக் கண்டு
சூர்ய சந்திரன் ஏழு சமுத்திரமும்
அஷ்டதிக் கஜங்களும் அலறி நடுங்கிற்று
அம்மனுக்கே ஜயம்—சோபனம் சோபனம்.

லலிதாம்பிகையுடன் பண்டாஸுரன் யுத்தஞ் செய்தல்.

133. இப்படிப் பண்டாஸுரன் வந்து சேனையை
ஏவினான் சக்தி சேனையை அடிக்க
அப்போ சக்திகள் கண்டு அதிகோபத்துடனே
அக்கினிக் கோட்டைக்கு வெளியில் வந்தாள்
மகாராஜராஜேஸ்வரி லலிதாம்பிகை
வம்பன் பண்டாஸுரன் வருகைகண்டு
ஓகோ இவனை வேறுவெல்வாரில்லை—என்று
யுத்தமுனையில் வந்தாள்—சோபனம் சோபனம்.

134. அக்கினிக் கோட்டைக்கு வெளியில் வந்தாள்—ஸ்ரீ
சக்கரத்தில் சுபசகுனமுங் கண்டாள்

ஒப்பற்ற அஸுராள் தம்பட்ட முரசுகள்
உக்கிரமாய் கொம்புகள் ஊதிக்கொண்டு
சக்திதேவிகளை அஸுரர்கள் எல்லாரும்
சண்டைபிடித்தடிக்கத் துவக்கினார்கள்
சக்திதேவிகள் அப்போ அஸுரசேனைகளை
சம்ஹரிக்கின்றார்கள்—சோபனம் சோபனம்.

135. சுற்றிலுந்தேவிகள் அஸுரசேனைகளை
சுற்றிப்பிடித்திழுத்துக் கத்தியாலே
குத்துகிறாள் சிலசக்தி ஈட்டிகளாலே
பொத்தென்று தலைவிழ வெட்டுகின்றாள்
செண்டுசெண்டாய் யானை துண்டந்துண்டமாய் விழ
கண்டங் கண்டமாய் குதிரைகள் விழ
மண்டைகளும் அஸுராள் உடல்களும் உருளுது
மஹாதேவிக்கே ஜயம்—சோபனம் சோபனம்.

136. சக்திகள் அஸுரசேனைகளை எல்லாம்
சம்ஹரிக்க யுத்த பூமியினில்
அஸுராள் தேகத்தினின்றும் ரத்தவெள்ளம்பெருகி
அலைமோதுங் காவேரி நதியைப்போல
யுத்தபூமியினில் ரத்த ஆற்றங்கரை
ஓடுது பிணங்களும் மிதந்துவர
சங்கையில்லா அஸுரர்களை வதைத்து
சங்கரி ஜயங்கொண்டாள்—சோபனம் சோபனம்.

137. ரத்தநதியினிருகரை தன்னிலுஞ் சாய்ந்து
கிடக்கின்ற விருட்சங்களென்னவென்றால்
தலைபோன அஸுராளின் தேகங்கள் எங்கிலும்
தறிபட்டகட்டைபோல் கிடக்கின்றன
அஸுராள் கொடிகளும் முகத்துடன் கண்களும்
அல்லிக்கொடியும் மலரும்போல
அஸுராள் குடைகளெல்லாம் தாமரைப்பூவைப்
[போல்
(அந்) நதியினில் கிடக்குது-சோபனம் சோபனம்.

138. யுத்தபூமியினில் ரத்தப் பிரவாகம்
ஓடுவதைக்கண்டு தேவரெல்லாம்

சக்திசேனையினுல் அத்தனை யஸுராளும்
ஸம்ஹரிக்கப்பட்டுக் கிடப்பதையும்
அத்தனை யானை குதிரை சேனைகளெல்லாம்
ஆமைபோல் மிதக்க ரத்த நதியில்
சித்தம் மகிழ்ந்து பாரிஜாத புஷ்பங்கள்
தேவிக்குச் சொரிந்திட்டார்—சோபனம் சோபனம்.

139. தேவர்களுஞ் சொர்ண புஷ்பமாரி சொரிந்து
திவ்விய சகுனங்களைக் காட்டினுர்கள்
கோபத்துடனே பண்டாஸுரன் விழிசிவக்கவே
கொடூரமாய் உருட்டி விழித்துக்கொண்டு
தன்சேனை யஸுராளுக் கபஜெயத்தைக்கண்டு
தாய் லலிதா தேவியை எதிர்த்தான்
அஞ்சாமல் தேவியும் பண்டாஸுரனைப் பார்த்து
அதிக கோபங்கொண்டாள்—சோபனம் சோபனம்

140. கண்டகன் பண்டனைக் கண்டவுடன் தேவிக்கு
கண்களிரண்டும் அக்கினிபோல் சிவக்க
மண்டலம் புகழ்கின்ற சண்டப்ரசண்ட உத்
தண்டமான கோதண்டவில்லை
வட்டமாய் நாணுலே கட்டி இழுத்தாளம்மன்
முட்டிவிட்டாளெங்கும் திடுக்கிடவே
துஷ்டனுமஸுரனைப் பொட்டென வதைக்கவே
சட்டமிட்டாள் மனதில்—சோபனம் சோபனம்.

**பண்டாஸுரனுல் ஏவப்பட்ட மாயா அஸுரர்களை அம்பிகையால்
ஏவப்பட்ட மாயா சக்திகள் அழித்தல்**

141. தொடுத்தார் யுத்தத்திற்கு தேவியும் பண்டனும்
தொகையில்லாச் சரமாரிகளைச் சொரிந்தார்
இடைவிடாமல் சரங்களைச் சொரிந்தாளம்மன்
இதைக்கண்டு பண்டாஸுரன் கோபமாய்
மாயையால் இருட்டவிட்டான் அஸுரன் அதை
மாதாவும் சூர்யாஸ்திரத்தால் போக்கினுள்
பேயன் குருடாஸ்திரம் விட்டான் அதையும்
போக்கிற்று நேத்திராஸ்திரம்-சோபனம் சோபனம்.

142. வாயுவின் அஸ்திரத்தை பண்டாஸுரன் போட்டான்
பார்வதி வருணுஸ்திரத்தால் போக்கினுள்

ஓயாத வியாதிகளை அனுப்பிவைத்தான் பண்டான்
ஒன்று பத்து நூறு கோடியாக
அச்சுதானந்த கோவிந்த நாமத்ரய
அஸ்திரத்தையம்மன் அனுப்பிவிட்டாள்
மிச்சமில்லாமலே வியாதிகளையந்த
அச்சுதர் போக்கினர்—சோபனம் சோபனம்.

143. அந்தகாஸ்திரத்தை அனுப்பிவைத்தான் பண்டான்
அம்பிகை மிருத்யுஞ்ஜயனுல் ஜயித்தாள்
மந்திரத்தால் சும்பநிசும்பன் சண்டமுண்டன்
மஹிஷாஸுரனையவன் அனுப்பிவைத்தான்
அனுப்பிவைத்தான் அதைக்கண்டு மஹேஸ்வரி
அட்டஹாஸம் செய்தாளதிலிருந்து
அம்மனட்டஹாஸத்தால் துர்க்காதேவி யுண்டாகி
அஸுராளை ஸம்ஹரித்தாள்—சோபனம்
சோபனம்.

144. முன்னே வேதங்களைத் திருடின சோமுகன்
முதலான அஸுராளை அனுப்பிவைத்தான்
தன்னையடுத்தபேர்க்கு அபயங்கொடுத்து
தற்காக்கும் வலக்கைக் கட்டவிரலை
உதறிவிட்டாளம்மன் அதிலேயிருந்து
உண்டாகிவந்த மச்ச மூர்த்தியும்
வதைத்தந்த அஸுராளெல்லாரையுஞ் ஜயித்த
மச்சாவதாரர்க்குச்—சோபனம் சோபனம்.

145. சமுத்திரத்தை வருத்திவிட்டான் பண்டன்
சக்தி சேனைகளை முழுகடிக்க
நிமிஷத்தில் அம்மன் உதறினளப்போது
நீட்டி ஆள்காட்டி விரல்தன்னையும்
குதித்தாருடனே யதிலேயிருந்து
கூர்மாவதார மகா விஷ்ணுவும்
கொந்தளிக்கும் சமுத்திரங்களெல்லாங்குடித்த
கூர்மாவதாரர்க்குச்—சோபனம் சோபனம்.

146. இரணியாக்ஷனை அதிகோபத்துடனே
இந்தப்பண்டாஸுரன் அனுப்பிவைத்தான்

வராக மூர்த்தியும் உண்டானாரப்போ
வலக்கை நடுவிரலில் இருந்து
பொல்லாத ஹிரண்யாக்ஷ அஸுரர்களை எல்லாம்
சற்றுப்போதைக்குள்ளே ஸம்ஹரித்தார்
வெல்லமுடியாத ரூபந்தரித்த லக்ஷ்மி
வராகமூர்த்திக்குச்—சோபனம் சோபனம்.

147. இரண்யகசிபு முதலஸுரரை எல்லாம்
இந்தப்பண்டாஸுரன் வருத்திவிட்டான்
பரமேச்வரியும் வலக்கைப் பவித்திர
விரலையசைத்தாள் அதிலிருந்து
அதிக பராக்கிரம நரசிம்மரும் வந்து
அஸுர ஹிரண்யனை ஸம்ஹரித்தார்
நாகசயனர் பக்தர் பிரகலாதர் லக்ஷ்மி
நரசிம்மமூர்த்திக்குச்—சோபனம் சோபனம்.

148. மஹாபலி முதலான அஸுரசேனைகளை
வருத்திப்போகச் சொன்னான் பண்டாஸுரன்
மகாமாயையும் வலக்கைச் சுண்டுவிரலை
சுழட்டியே உதறினாள் அதிலிருந்து
வந்தார் மகாவிஷ்ணு வாமனமூர்த்தியாய்
மாபலி அஸுரனையும் ஜயித்து
மாபலியை ஜயித்துப் பாதாளத்தில் தள்ளின
வாமனமூர்த்திக்குச்—சோபனம் சோபனம்.

149. கார்த்த வீர்யார்ச்சுனனைச் சேனைகளுடனே
கண்டகன் பண்டன் அனுப்பிவைத்தான்
ஆர்த்திகளைப்போக்கும் லலிதேச்வரியும்
அசைத்தாள் இடக்கைக் கட்டவிரலை
பரசுராமர் கையிற்கோடாலிகொண்டு
புறப்பட்டார் வெள்ளிமலையைப்போல
பலமுள்ள கார்த்தவீர்யார்ச்சுனனை வதைத்த
பரசுராமருக்குச்—சோபனம் சோபனம்.

150. இராவணனை குடும்பகர்ணனிந்திரஜித்தனை
இராக்ஷதரை யவன் அனுப்பிவைத்தான்
தேவியும் இடக்கையின் ஆள் காட்டிவிரலை
செப்பிடுவித்தைபோல் உதறினளே

ஸ்ரீராமலக்ஷ்மணர் ரதத்திலிருந்து கொண்டு
ராவணன் முதலோரை வதைகள் செய்தார்
தாமஸியாமல் ராக்ஷதாளை வதைத்த
(ஸ்ரீ) ராமலக்ஷ்மணருக்கும்—சோபனம் சோபனம்.

151. வானரங்களையும் வருத்திவிட்டான் பண்டன்
மலைமலையாகவே தேவிமேலே
விஜய அம்பாள் தன் இடக்கை நடுவிரலை
மின்னல் மின்னினுல்போல் உதறினுளே !
பலபத்திரரும் வந்தார் கைலாச மலைபோல
பெரிய உலக்கை கலப்பை கொண்டு
உலக்கை கலப்பையால் குரங்குகளைக் கொன்ற
உக்கிரபாலருக்குச்—சோபனம் சோபனம்.

152. சிசுபாலன் கம்சன் சகடன் பூதன் தன்னை
துஷ்டன் பண்டாஸுரன் அனுப்பிவைத்தான்
விச்வேஸ்வரியும் இடக்கைப் பவித்திர
விரலை அசைத்தாள் அதிலிருந்து
சங்கர்ஷணன் ப்ரத்யும்னன் அநிருத்தனுகவே
ஸ்வாமி வந்தவர்களை ஸம்ஹரித்தார்
சங்கர்ஷணன் ஸ்ரீகிருஷ்ணன் அநிருத்தன்
ப்ரத்யும்னன்
ஸ்வாமி நாலுபேருக்கும்—சோபனம் சோபனம்.

153. கலியுகாஸ்திரத்திலே கலக்கும் மிலேச்சரைக்
கண்டகன் பண்டன் அனுப்பிவைத்தான்
கலியாணியும் இடக்கைச் சுண்டுவிரலைக்
காட்டி அசைத்தாள் அதிலிருந்து
அட்டஹாஸத்துடன் கல்கி அவதாரமாய்
அச்சுதரும் வந்தார் அந்தக்ஷணம்
முரட்டுத்தனமுள்ள மிலேச்சரை வதை செய்த
முரஹரி கல்கிக்குச்—சோபனம் சோபனம்.

154. பின்னும் அனேகம் மோகனுஸ்திரந்தன்னை
பூட்டிவிட்டான் சக்திசேனையின்மேல்
அந்நேரம் அம்மனும் சாம்பவர் அஸ்திரத்தால்
அதையும் விமோசனம் செய்துவிட்டாள்

அக்ஷௌகிணி சேனையை நாராயணுஸ்திரத்தால்
பஸ்மமயமாக ஆக்கிவிட்டாள்
துஷ்டன் குடிலாக்ஷன முதற் சேனுபதிகளை
சிதைத்தாள் பாசுபதத்தால்—சோபனம் சோபனம்.

155. பின்னும் அனேகம் அஸ்திரத்தாலவன்
அக்ஷௌகிணிசேனை போனபின்பு
என்ன பலம் லலிதாதேவிக்கு என்று
ஏங்கி விழிக்கின்ருன் பண்டாஸுரன்
அம்மனுந் தம்முடைய நாதர் காமேசரை
அந்தரங்கத்திலேதான் நினைந்து
காமேசர் அஸ்திரத்தால் ஜயம் வரட்டுமென்று
கணவரை வேண்டினுள்—சோபனம் சோபனம்.

பண்டாசுரன் வதம்.

156. கண்டகன் பண்டாஸுரனை வதைக்கவென்றே
காமேசரும் அஸ்திரங்கொடுத்தார்
வாங்கிக்கொண்டு அம்மன் காமேசர் அஸ்திரத்தை
மண்டலாஹாரமாய் வில்வளைத்து
கோடி சூரியன் போன்ற காமேசர் பாணத்தைக்
கோதண்டத்தில் வைத்து மந்திரித்து
வேடிக்கையாகவே காதுபரியந்தம்
விசையாய் இழுத்துவிட்டாள்-சோபனம்சோபனம்.

157. தேவி பிரயோகித்த அஸ்திரந்தானப்போ
தேவேந்திரன் வஜ்ஜிராயுதத்தடிபோல்
தாவிப்பண்டாஸுரன் மார்பிலே பாய்ந்தது
தரணியிலே விழுந்து உயிரைவிட்டான்!
அஸ்திரமுடையாளின் அக்கினி ஜ்வாலையாலே
அவனுடபுரங்களும் வெண்ணீராச்சு
அஸ்தமனத்தில் பண்டாஸுரனை வதைத்து
அம்மன் ஜயங்கொண்டாள்-சோபனம் சோபனம்.

158. புஷ்பம் பன்னீர்களைச் சொரியவே தேவர்கள்
புகழ்ந்துசகிகள் வெண்சாமரை வீச
அப்பொழுதுதேவி சக்தி சேனையுடன்
ஆலயத்தை அம்மன் வந்தடைந்தாள்

ஆயுதங்களால் அடிபட்ட சக்திகள்
காயத்தை அம்ருதக்கண்ணுல் போக்கினுள்
நோய்கள் போனதுபோல சுகம்பெற்ருர் பூமியும்
புனிதமாய் செழித்தது—சோபனம் சோபனம்.

159. மும்மூர்த்திகள் முதல் முப்பத்து முக்கோடி
தேவர்கள் முனிவர்கள் பிராம்மணுளும்
அம்மனை வந்து அடிபணிந்து கொண்டு
அற்புதமான ஸ்துதிகள் செய்தார்
அமராளும் மன்மதன் தேவி ரதியைக் காட்டி
அறிவித்தார் மதனனை எழுப்பவென்றே
இம்மாத்திரந் தயவுசெய்ய வேண்டுமம்மா
எங்களுக்காய் வேண்டிச்—சோபனம் சோபனம்.

160. இந்த ரதியுடைய கணவன் மன்மதனை
எழுப்பித்தந்து எங்கள் மனங்குளிர
எவ்விதமாவது தயவுசெய்து ஈசரும்
ஈஸ்வரியைக்கூடி சுப்ரமண்யர்
பிறந்து தாருகன் முதல் அஸுரர்களை வதைத்தால்
பிறகு சங்கடமில்லை எங்களுக்கு
கூடியே தேவர்கள் எல்லாருங்கைகளை
கும்பிட்டு நின்ருர்கள்—சோபனம் சோபனம்.

161. கண்டவுடனே ரதிதேவியை அம்மன்
காமேசர்முகத்தை ஆதரவாய்ப் பார்த்தான்
உண்டாய்விட்டான் மதன் வஜ்ஜிரதேகத்துடன்
உடனே தாயாரை நமஸ்கரித்தான்
அனுக்கிரஹித்தாள்தேவி மன்மதனுக்கு
ஆருமினியிவனை ஜயிக்காமல்
வானவரும் இனி ஜயிக்கமாட்டாளென்று
வரமுங்கொடுத்துச் சொல்வள்—சோபனம்
சோபனம்.

162. குழந்தாய் உனக்குப்பயமில்லை இனிமேல்
கூட்டிவை பார்வதியுடன் ஈசரை
தழுதழுத்துன்னுட பாணத்தால் சங்கரர்
தானே விவாகஞ்செய்வார் பார்வதியை !

ஒருவர் கண்ணுக்கும் இனி அகப்படமாட்டாய்
உன்னைத் தூஷித்த பேர் அண்ணு கள்ளர்
சற்றும் பயமில்லை நாமிருக்கின்றேமென்று
சங்கரியனுப்பினுள்—சோபனம் சோபனம்.

### குமாரமூர்த்தி அவதாரமாகி தாருகன் முதலிய அஸுராளை வதைத்தல்

163. அம்மன் அனுக்ஞையால் மதனன் பூச்சரத்தாலே
அடித்தான் பார்வதிதேவி பரமேசரை
வந்து விவாகஞ்செய்து ரமித்தார் பரமசிவன்
குமாரரும் உண்டானுர் சிவனிடத்தில்

கொன்று தாருகன் முதல் அஸுராளை வதைத்த
கோலவேலருக்குச்—சோபனம் சோபனம்.
தேவசேனுதிபதி தெய்வானையை மணந்து
ஸ்ரீ புரந்தன்னில் வந்தார்—சோபனம் சோபனம்.

### லலிதாம்பிகையின் ஸ்ரீ புரவர்ணனை

164. ஸ்ரீபுரமென்றதைக் கேட்டது மகஸ்தியர்
தவமுனி ஹயக்ரீவரைப் பார்த்து
ஸ்ரீ புரமென்பதை விஸ்தாரமாகவே
செல்லவேண்டும் தயவாக வென்றுர்

அன்புடன் வார்த்தையைக் கேட்டு ஹயக்ரீவர்
அகஸ்திய முனிவரைப் பார்த்துரைப்பார்
இன்பங்களுண்டாகத் தேவியின் நகரத்தை
இனிச்சொல்வோம்கேளென்றுர்—சோபனம்
சோபனம்.

165. பண்டாஸுரனை வதைத்த ஸந்தோஷத்தால்
பரமேச்வரிக்கும் காமேசருக்கும்
தேவசேனுதிபதியும் தேவர்களும் கூடி
ஸ்ரீ லலிதாம்பாள் கொலுவிருக்க

ஈச்வரியாளுக்கு சிந்தாமணிக்கிரஹம்
மகிழ்ந்து விச்வகர்மா இவர்கள் சொன்னபடிக்கு
புகழ்பெறவே செய்தார்-சோபனம் சோபனம்.

## ஸ்ரீ புரத்தின் விவரம்

166. தரணியில் ஒன்பதும் சமுத்திரத்தில் ஏழும்
தேவிக்குப் பதினாறு ஸ்ரீ புரங்கள்
மேருகிரியிலொரு ஸ்ரீ புரமுண்டதை
முன்னாலே உமக்கு நான் செல்லுகிறேன்
மூவராலும் ஆதிசேஷராலுஞ் சொல்லி
முடியாது அம்மன் புரமகிமை
சாவதானமாகக் கேட்கவேண்டுமிதை
தன்யனே சொல்லுவேன்-சோபனம் சோபனம்.

167. ஒன்ருவது கோட்டை இரும்பாக்குமதற்கு
உயரம் நானூறு யோஜனைகள் உண்டு
நன்ருக நூறு யோஜனை அகலங்காண்
நான்கு புறத்திலும் வாசலுண்டு
வாசல்கள் தோறும் கோபுரமுண்டு அதற்கு
வரியாக தட்டுக்கள் இருபத்தஞ்சு
யோஜனைக்கு ஒருதட்டு வீதங்கணக்கு
உச்சி மகுடம் மூன்று-சோபனம் சோபனம்.

168. இந்த வாசல்போலே நாலு வாசலுக்கும்
இதுபோல கோபுரந்தட்டு முண்டு
இந்தக்கோட்டைவாசல் கதவு கோபுரமுதல்
எல்லாம் இரும்புப்பணி இதைப்போல
எந்தக்கோட்டைகளினி சொல்லப்போகின்ருேமோ
அந்தக் கோட்டையும் இதுபோலகஸ்தியா
இந்தக்கோட்டை கழிந்தப்புறமுள்ளது
ஏழுயோஜனையுண்டு சோபனம் சோபனம்.

169. ஏழுயோஜனையுள்ள நடு இடைவெளி தன்னில்
எல்லா மரங்களும் நிறைந்திருக்கும்
தோழர்களே ஏழுயோஜனையில் விஸ்தாரம்
சொல்லப்போகிருேம் கோட்டை இடை நடுவில்
காளியுங் காளம் சக்தியுடனே
காலசக்ராசனத்தில் இருந்து
லலிதையுடைய நாமஞ்செபித்து ஒன்ருங்கோட்டை
ரக்ஷிக்கிருள் என்றும் சோபனம் சோபனம்.

170. வெண்கலக் கோட்டையில் வஸந்த ருதுக்காவல்
வேலியும் கற்பக விருக்ஷமாகும்
தங்கச்செம்புக் கோட்டையில் வேலி ஹரிசந்தனம்
சுசியான கிரீஷ்மருதுக்காவல்
ஈயக்கோட்டையின் வேலி சந்தனம் விருக்ஷங்கள்
எங்குஞ் சுற்றிக்காவல் வருஷருது
முன்னலிரும்புக் கோட்டையின் வேலி மந்தாரை
வெளுத்த சரத்துருதுகாவல்-சோபனம் சோபனம்.

171. பஞ்சலோகக் கோட்டைக்குப் பாரிஜாதம்வேலி
ஹேமந்தருதுகாவல் காததூரம்
பஞ்சப்பொன் கோட்டைக்கும் மந்திரிணி முதலான
சக்திகள் கிரகம் சசிருதுக்காவல்
பிக்ஷாரகத்துக்குச் சித்தர்களும் முத்திப்
பெண்டுகளுங்கூடி இருக்கின்ருர்கள்
பிக்ஷாரகம் கழிந்தப்புரஞ் சாரணர்
பத்மராகக்கிரகம்-சோபனம் சோபனம்

172. அழகிய கந்தர்வாள் வைரக்கிரகந் தன்னில்
அதற்குப்பின் யோகிகள் வஜ்ஜிரக்கிரகம்
புதுநாகரத்னமும் வைடூரியத்தாலும்
பின்னிந்திரக் கல்லாமுள்ள கிரகம்
முத்துக்கள் சூழும் மரகதத்தால் கிரகம்
மின்போல் வாராகிக்கும் நாலுகிரகம்
சுத்தமான கிரகம் பிரம்மாவினுடையது
செம்பவழத்தாலே-சோபனம் சோபனம்

173. மாணிக்க மண்டபத்தில் விஷ்ணுவும் இருக்கின்ருர்
மண்டபத்தினிடத்தில் சிவலோகம்
பிரம்ம தேவருடைய சத்தியலோகமும்
பிரபலமான விஷ்ணுவின் உலகம்
மாயக்கோட்டை அனந்தம் வர்ணமுள்ள கோட்டை
அதற்கிடையில் சூர்யனின் விமானம்
பகவான் மார்த்தாண்டவர் பைரவர் இருப்பு
பக்தரே கேளின்னுஞ்-சோபனம் சோபனம்.

174. சந்திர பிம்பத்தில் சிங்காரமாகவே
சரியாக இருபத்தஞ்சு கோட்டையும்

சுந்தரமான கோபுரங்களும் நூறுண்டு
தொகையொரு கோட்டைக்கு நான்குவீதம்
அப்புரந்தாமரைப் புஷ்பங்களின் வனம்
ஆறுயோஜனைக்கு நிறைந்திருக்கும்
விப்ரனே அதற்குக் கிழக்காகவே யெங்கும்
சுற்றிக்கதம்பவனம்—சோபனம் சோபனம்.

175. அதற்கு கிழக்கிலே மும்மூர்த்திகளுக்கும்
அகங்கள் மூன்றுபத்ம அடவியிலே
இதற்கு நடுவில் சிந்தாமணி ரத்தினத்தால்
ஈஸ்வரி லலிதாதேவியின் கிரகம்
நாலுபுறம் வாசல் உண்டதற்கு குச்சியில்
ஞான ரத்தினத்தாலே மகுடம்
வலதுபுறத்திலே மந்திரிணியின் கிரகம்
வாராகிக் கிடப்புறம் சோபனம் சோபனம்.

176. அக்கினி மூடுக்கிலே அக்கினி குண்டம்
அதற்குமேலே நிற்கும் ஸ்ரீ சக்ரத்தேர்
நிற்கின்றது வாயுமுடுக்கில் மந்திரிணிதேர்
நேரே ஈசான்யத்தில் வாராகிதேர்
இந்த நடுவிலே சக்திகளின் கிரகம்
சிந்தாமணி கிரகத்தைச் சுற்றிலும்
சிந்தாமணிக்கிரகம் சிந்தாமணிச்சுவர்
சுற்றிலும் தீபங்கள்—சோபனம் சோபனம்.

177. சிந்தாமணிக்கிரகத்தின் நடுமத்தியில்
சிந்தாமணியாலே ஸ்ரீ பீடம்
அஷ்டகோண வடிவாகி விளங்கிய
சக்ர ராஜாவென்ற பீடத்தின்மேல்
ஐம்மூன்று தட்டந்த ஸ்ரீ பீடத்திற்கு
ஆயிரத்தறுநூறு முழம் வீதி
கைமுழத்திற்கிருபநு முழ உயரம் தட்டு
கடலைக் குடித்தவகஸ்தியா—சோபனம் சோபனம்.

178. தட்டுத்தோறும் இதுபோல் உயரம் வீதி
தட்டுத்தோறுஞ் சக்திகள் இருக்காள்
திட்டமாய் ஸ்ரீ பீடத்திற் கப்புறத்திலே

சிங்காரப்படி முப்பத்தாறு ஸ்தம்பம்
வட்டமான இந்த பீடத்தில் ஈசர் பிரம்மா
மாலவர் ருத்திரர் கட்டிலின் கால்
கட்டிற்பலகை சிவன் சதாசிவன் பாய்
ஈசானன் தலையணை—சோபனம் சோபனம்.

179. மஞ்சத்தின்மேல் அம்ஸதூளிகா மெத்தையும்
வட்ட இருபுறந்தலையணையும்
மஞ்சத்தின்மேலே கிழக்கைப் பார்த்திருக்கின்றார்
மன்மத கோடிபோல் காமேசரும்
நாதர் காமேசர் மடிமேல் கிழக்கைப்பார்த்து
தாய் லலிதாதேவியும் இருக்காள்
பாலா லலிதாதேவிக்கு நித்தியம்
பதினாறு வயதென்றும்—சோபனம் சோபனம்.

180. இடது துடைமேல் சுவாமி வைத்துக்கொண்டம்மனை
வலது கன்னத்தை முத்தமிட்டுக்கொண்டு
விடைமேல் அழகரும் வளமுடன் தேவிக்கு
விபூதியிட்டு திருஷ்டி கழித்து
அஞ்சாதீர் என பக்தர்க்கபயப் பிரதானஞ் செய்து
அம்பிகையுடன் தாம்பூலந்தரித்து
இந்தப்படி ஈசன் சிந்தாமணிக்கிரகத்தில்
இருந்தார் தேவியுடன்—சோபனம் சோபனம்.

181. தேவிக்கு உயர நாற்பது முழத்திற்குமேல்
தேசத்தில் ஒப்பில்லா மேல்கட்டிலில்
*யமுனைகைஹாரமாமச் சுற்றியிருக்கின்றாள்
இஜ்ஜகத்தை மோகிப்பிக்கும் மாயை !
தேவியுடைய சௌபாக்யத்திற்கொப்பில்லை
தேவிதானறிய வேணுமகஸ்தியா
நாவாலும் மனதாலும் எண்ணமுடியாது
ராஜேஸ்வரி மகிமை—சோபனம் சோபனம்.

**தேவியின் ஸ்ரீவித்தை ஜபத்தின் மகிமை உரைத்தல்**

182. மந்திரங்களுக்கெல்லாம் பெரிதான ஸ்ரீ வித்தை
மகாகுருவினிடத்தில் வேண்டிக்கொண்டு

---

*இது குண்டலி சக்தி அதாவது உடலைப் பாம்புபோல் மூன்றரைச்சுற்றாய் வளர்த்துக் கொண்டிருப்பவள்.

மந்திரத்திற்குச் சொன்ன ஜபஹோமங்கள் செய்து
மஹிமை தேவாளுக்குப் போஜனமளித்து
பின்னர் தேவியை பரமாத்மாவாய் தியானித்து
பிறகு நிஷ்காம்ய ஜபம் செய்த பேர்க்கு
எண்ணின காரியம் கைகூடும் ஜகத்திலே
இவர்கள் எங்கும் பூஜ்யர்—சோபனம் சோபனம்.

183. அசுத்தத்துடன் சோபனத்தைச் சொன்னபேர்க்கும்
அசங்கித்தபேர்க்கும் பிணிகளுண்டு
அசுத்தமில்லாமலும் அசங்கையில்லாமலும்
அம்மன் சோபனமென்றும் பக்தியுடன்
விஸ்வாஸமாய்ச் சொன்னபேர்க்கும் கேட்டவர்க்கும்
வியாதியில்லை சத்ருபாதையில்லை
நிஜமாய் ஜ்வரம் வியாதி ரோகாதிகளில்லை
நித்ய சம்பத்துண்டு—சோபனம் சோபனம்.

184. இந்தச் சோபனம் பாடும் வாழ்வரசிகள் எல்லாம்
தேவிகளென்று மனதிலெண்ணி
சந்தனந்தாம்பூலம் குங்குமம் பழம் புஷ்பம்
சந்தோஷமாய் எல்லார்க்குங்கொடுத்து
எங்கெந்த கிரகங்களில் சொல்லவைத்துக்கேட்பாரோ
அந்தந்த கிரகங்களில் அரிஷ்டம் நீங்கும்
சுந்தரி கிருபையாலே சந்ததி விருத்திக்கும்
தீர்க்காயுஸுமுண்டு—சோபனம் சோபனம்.

### தேவியை பூஜிக்கவேண்டிய முக்கிய காலங்கள்.

185. அன்பாய் நவராத்திரி பௌர்ணமி சுக்கிரவாரம்
அம்மன் சோபனந்தன்னைச் சொன்னபேர்க்கு
துன்பங்கள் உண்டாகமாட்டாது ஒருக்காலும்
தென்திசையை யடையார் தினஞ்சொன்னவாள்
ரொம்பச் சொல்லுவானேன் தேவிதாசாளுக்கு
திரிலோகமும் அவர்கட்கு ஜயம்
நம்பினபேர்களே கார்த்திட தேவியல்லால்
நாட்டிலே வேறுண்டோ—சோபனம் சோபனம்.

186. அத்திரி மகரிஷி ஆசிரமத்தில் அநுசூயை
கேட்ட இஞ்ஞான ரகஸியத்தை

நல்துரையில் வாழும் லக்ஷ்மிகடாக்ஷத்தால்
நாராயணனுரைத்த தேவி மகிமை
ராஜேஸ்வரியால் மகிமை யகஸ்தியரும்
ஆதரவாய்ச் சொல்லச் சொன்னதற்கு
நாடுசெழிக்க அவதரித்துவந்த
மாதவர் அறிவித்தார்—சோபனம் சோபனம்.

187. அறிந்தறியாமல் இந்தச் சோபனத்தில்
அர்த்த அக்ஷரப்பிழை இருந்தாலும்
மகப்பிரபு மனுஷப்பிரபு விஷ்ணு என்பது போலும்
மராமரா என்றதோர் நாமம்போலும்
வரதசிவனர் சிவசங்கர நாமம் போலும்
வார்த்தைப் பிழைகள் தன்னைப்பொறுத்து
ஏதுவிதத்திலும் (பர) தேவியைத் தியானித்தால்
ஏழைக்கிரங்குவள்—சோபனம் சோபனம்.

### மங்கள வாழ்த்து

188. ஜயமங்களம் லலிதாதேவிக்கும்
ஜயமங்களம் காமேச்வரருக்கும்
ஜயமங்களம் மந்திரிணி தண்டநாதைக்கும்
ஜயமங்களம் ஸர்வசக்திகட்கும்
ஜயமங்களம் ஹயக்ரீவருக்கும்
ஜயமங்களம் அகஸ்தியமாமுனிக்கும்
ஜயமங்களம் ஸர்வஜனங்கட்கும் நமக்கும்
ஜயமங்களம் நித்திய சுபமங்களம்.

சோபனம் முற்றுப்பெற்றது.

ஓம்—தத்—ஸத்—பிரம்மார்ப்பிதமஸ்து.

ஓம்—தேவ்யை நம:

உ
பரதேவி துணை

# தேவி பாடம்

## கடவுள் வணக்கம்

கொப்பியளோ பஞ்சநதீசா
கொப்பியளோ ப்ரணதார்த்தீசா
கொப்பியளோ ஜய தர்மஸம்வர்த்தினி
கொப்பிபாடுவோம் ஜய கொப்பியளோ
(என்ற பல்லவிக்கு சில பாகங்களை சந்தையாகப் பாடலாம்)

1. மிருகண்டுரிஷி பிள்ளை மார்க்கண்டேயமுனி
யாகம பண்ணுகின்ற காலத்தினில்
மார்க்கண்டேயர் ஜய முனிவர்க்குச் சொன்ன
மகாதேவியுடைய மகிமை எல்லாம்

2. வியாசமுனி பரீக்ஷித்துக்குச் சொன்ன
விச்வேச்ரி மகிமை எல்லாம்
ஸுதமுனி சவுனகாதிகட்குச் சொன்ன
ஸ்ரீதேவியின் மகிமை தன்னில்

3. அறிந்தமட்டுக்கும் நானுரைப்பேனிதில்
அக்ஷரப் பிழைகள் வராமல்
சேஷாத்திரி குருவை பணிந்தேமஹா
தேவிமகிமை சொல்லத்துணிந்தேன்

4. சரஸ்வதியும் கணேசரும் எந்தனுக்கு
தந்தேன் பாக்கியம் என்று சொல்ல
சந்தோஷமான ஜயத்துடனே
ஸர்வேச்வரி மகிமை யுரைப்பேன்.

## கதை வரலாறு

5. சுரதனென்ற ஓரரசன் தன்னுட
ஜகத்தை எல்லா மாண்டிருந்தான்
தர்மாதர்மத்தை ஆராய்ந்து நல்ல
சாஸ்திரப்படிக்கு ஆண்டிருந்தான்

6. அஸுயை யினலொரு பகையரசன்
அவனை அடித்துத் துரத்திவிட்டான்

அதிசோகத்துடன் ராஜாவும் ஒரு
அடவிதனில் வந்து சஞ்சரித்தான்

7. சமாதி என்கிற வைசிய னொருத்தன்
புத்திரருடன் விரோதப்பட்டு
பொருக்கமாட்டாது கோமுட்டியும்
புறப்பட்டு வந்தான் வனத்தை நோக்கி

8. கோமுட்டியைக்கண்டு ராஜனுமப்போ
குசலப்ரச்னம் கேட்டிடவே
அன்புடையாளுமென் புத்திராளும் மஹா
அவமானந்தனைப் பண்ணினார்கள்

9. சகிக்கமாட்டாதே நானுமிப்போதிந்தத்
தவவனத்தினில் வந்தேனென்றான்
அவன் சொல்லிவந்த வார்த்தைகளைக் கேட்டு
ஆச்சரியப்பட்டு ராஜனப்போ

10. என்னுடைய வர்த்தமானந்தன்னை
எடுத்துரைப்பேன் நீர்கேளும்
சத்ருவால் ஒரு ராஜன் வந்து என்னை
சண்டை பண்ணி ஜயித்து விட்டான்

11. பாரியையுடனே புத்திராளையுமென்
பட்டணந் தன்னையும் நானிழந்தேன்
பந்து ஜனங்கள் தன்னையிழந்து இந்த
வேடர்வனத்தில் வந்தேனென்று

12. சொல்லிக்கொண்டு இருவருமாய்
சுமேதஸ் முனியைக்கண்டு பணிந்தாள்
திடபுத்தியாய் இருக்கும்பொழுதிந்த
சோகம்வந்து மறைப்பானேன்

13. ஞானஸ்வரூபியே சொல்லுமென்று கேட்க
ராஜாவைப்பார்த்து முனியுஞ் சொல்வர்
பள்ளுப்பறை பதினெலுசாதிகட்கும்
ஈ எறும்பு எண்பத்தி நான்கினுக்கும்

14. எனது நானென்ற அபிமானம் ஜீவர்
எல்லாரிடமும் இருக்கின்றது
அகங்காரிம் பூர்ணமாயிருக்கும்போது
அகம்பிருமம் நானென்கின்றீரே

15. அஞ்ஞான மாயா மயக்கம் விலக்கிட
ஹரி ப்ரம்மாவாலும் கூடாது
அண்டம்பதினாலுலகம் முழுவதும்
அம்மன் மாய்கையினால் விளங்கும்
16. ஸ்ரீ தேவி ஜகன் மாதாவினுடைய
திருஷ்டியினாலே விளங்கி நிற்கும்
ஸ்ரீ தேவி மாயாவல்லப மென்றந்தச்
சமேதஸ்முனியு முரைத்திடவே
17. தேவி யாரோ தெரியவில்லை என்று
திரும்பவும் ராஜன் கேட்கலுமே
ஸ்ரீ தேவிமகிமை தன்னை யப்போ
சுமேதஸ்முனியு முரைக்கலுற்றார்

மதுகைடவர் விருத்தாந்தம்

18. திருப்பாற்கடல் தன்னில் ஸ்ரீ ஹரியும்
சேஷசயனத்தில் பள்ளிகொண்டார்
மகாவிஷ்ணுவின் கர்ணங்களிலிருந்து
மதுகைடவர் இருவர் உண்டானார்
19. விழித்துப் பார்த்தங்கே பிரம்மாவை யவர்கள்
முஷ்டியுத்தம் பண்ண வந்தெதிர்த்தார்
அயனுங்கண்டு பயந்துகொண்டு ஸ்ரீ
ஹரியை வந்து நமஸ்கரித்தார்
20. நினைவுதெரியாது விஷ்ணுவுமப்போ
நித்திரையின் வசப்பட்டிருந்தார்
அம்மாதேவி நிததிராமோஹினியே பொல்லா
அஸுராள் பயத்தால் அயனிடம் வந்தேன்
21. மோகினியே ஜகன்மாதாவே மஹா
விஷ்ணுவைவிட்டு வெளியிரம்மா
(என்று) லோகமோஹினி மஹிமைதனைச்சொல்லி
நாலுமுகவரும் ஸ்தோத்தரிக்க
22. பகவானுடைய சரீரந்தனை விட்டு (தேவி)
பிரத்தியக்ஷமாக எதிரில் வந்து
வேண்டும் வரத்தைக்கொடுத்து பிரம்மாவுக்கு
விச்வமோகினியும் மறைந்தாள்
23. மகாவிஷ்ணுவும் எதிர் நின்ற பிரம்மாவை
வந்த காரியங் கேட்கலுற்றார்

(நீர்) யோக நித்திரை பண்ணுகின்றபோது
உம்முடைய கர்ணங்களிலிருந்து

24. மதுகைடவர் என்றிரண்டு பொல்லாத
மஹா அஸுரர்கள் உண்டானர்
அந்த அஸுரரைக் கொல்ல வேணுமென்று
ஹரியைப் பிரம்மன் நமஸ்கரித்தார்

25. ஆகட்டுமப்படியே சம்ஹரிப்போமென்று
அனுப்பிவைத்தார் பிரம்மாவை
மகாவிஷ்ணுவுடன் யுத்தம்பண்ணப் பொல்லா
மதுகைடவர் வந்தெதித்தார்

26. ஹரியுடனே அஸுரர்களிருவருக்கும்
அநேககாலம் யுத்தம்செய்தும்
ஹரியும் ஜயிக்கமுடியாமல் அந்த
அஸுராளைப்பார்த்து சந்தோஷமாய்

27. அஸுரர்களே உங்களுக்கு எம்மால்
ஆனவரத்தைத் தருமோமென்றார்
ஆனவரர்த்தை தருவோமென்றவுடன்
அஸுராளும் அதிகோபத்துடன்

28. விஷ்ணுவைப்பார்த்தவாள் கர்வத்துடன் உமக்கு
வேண்டும் வரத்தை நாம் தருவோமென்றார்
உங்களிருவரையும் சம்ஹரித்திட
ஒருவரமெனக்கு வேண்டு மென்றார்

29. வஞ்சித்தார் நம்மை மஹாவிஷ்ணுமிப்போ
வார்த்தை இரண்டு சொல்லலாகாதென்று
சரிக்குச்சரி நாமும் ஆகவேணுமென்று
சக்கரத்தாருடன் ஏது சொல்வாள்

30. அப்பு இல்லாத ஸ்தலந்தனில் எங்களை
பிருதிவியில் வைத்துக் கொல்லுமென்றார்
தன்னுடைய தொடைதனில் வைத்துமே
சம்ஹரித்தாரப்போ அஸுரர்களை

31. அஸுராளுடைய தேகங்கள் தானிப்போ
அவனியாக இதோ விளங்குவது
ராஜேஸ்வரி மகிமைகள் தான் சொல்ல
நான்முகராலும் முடியாது.

## மகிஷாஸுரன் விருத்தாந்தம்.

32. மகிஷ அஸுரன் என்னும் ஒருத்தன்
தபஸுமிகப்பண்ணி வரமடைந்தான்
ஜகத்திலுள்ளோரை உபத்திரவிக்க அஸுரன்
தேவர்கள் ரிஷிகளெல்லோருங்கூடி

33. கைலாசத்திற்கு ஓடிவந்தெல்லோரும்
அறிவித்தார் மஹாதேவருக்கும்
சிவனுடைய சந்நிதியில் நின்று
தேவிமகிமை சொல்லி ஸ்துதித்தார்

34. தேவாளுடைய முகத்திலிருந்தம்மன்
தேஜோரூபமாய் ஒன்று சேர்ந்து
அத்தனைபேர்களின் தேஜஸைக்கிரகித்து
அம்மன் பிரத்தியக்ஷமாக வந்தாள்

35. அத்தனை தேவர்களும் பணிந்து தங்கள்
ஆயுதமும் தேவி கைகொடுத்தார்
பக்தியாய் ஆயுதமுங்கொடுக்க அம்மன்
பதினெட்டுக்கையிலுங் தரித்துக்கொண்டு

36. சிம்ஹவாகனத்தில் ஏறிக்கொண்டாள் மஹா
தேவியும் யுத்தம் பண்ணவந்தாள்
மஹிஷாஸுரனும் தேவியுமாய் மஹா
ஆங்காரமாய் யுத்தம் பண்ணலுற்றார்

37. அநேககாலம் மகிஷன் தேவியுடன்
அஞ்சாமலே யுத்தம்செய்து நின்றான்
மாய்கையினால் பலரூபமெடுத்தவன்
மகாதேவியுடன் யுத்தம் செய்தான்

38. காளிரூபமெடுத்துக்கொண்டு தேவி
கைதனில் சக்ராயுதமுங் கொண்டு
மஹிஷரூபமெடுக்கும் போதவனை
மடியவெட்டினாள் மாதேவியும்

39. காமாக்ஷிதேவியும் சந்தோஷமாயந்தக்
காளிகாதேவியைக் கண்டுகந்து
மஹிஷாஸுரமர்த்தினி என்றப்போ
மஹாதேவியும் தானழைத்தாள்

40. மகிஷாஸுரனை ஸம்ஹரித்த எங்கள்
மஹாதேவியே நமஸ்காரம்
மனஸ்தாபம் போக்கிநாடுகள் தந்த
மஹேஸ்வரியே நமஸ்காரம்

41. அண்டத்திற்கெல்லாம் அதிபதியே
ஜகதம்பிகையே நமஸ்காரம்
அபயமென்றோரை ரக்ஷித்திடும்
அம்மா உனக்கு நமஸ்காரம்

42. பிரணவமயமான பார்வதியே
பரதேவதையே நமஸ்காரம்
சுத்தஸ்வரூப சுந்தரியே சிவ
காமவல்லியே நமஸ்காரம்.

43. ஞானஸ்வரூபியே கல்யாணியே
ஸ்ரீமந்நாராயணியே நமஸ்காரம்
சாந்தரூபசரீரணியே சிவ
சங்கரியே நமஸ்காரம் (என்று)

44. தேவரெல்லாரும் ஸ்துதிக்கலுமே
(மஹா) தேவியுங்கேட்டதி சந்தோஷமாய்
வேணவரங்களைக் கேளுந்தரோமென்று
வேதநாயகி சொல்லலுமே

45. ஆபத்துக்களொன்றும் வராமலே எங்கள்
அம்மா வந்து நீ ரக்ஷிக்கவேணும்
ஆகட்டுமென்று விடையளித்து ஜக
தம்மனும் அந்தர்த்தான மடைந்தாள்

சும்பன் நிசும்பன் விருத்தாந்தம்.

46. அதற்குப்பின் சிலகாலத்தினில் பொல்லா
அஸுரர் இரண்டுபேர் உண்டானார்
அந்த அஸுரரை சம்ஹரித்த ஜக
தம்பிகையின் மகிமை சொல்லுவேன்

47. சும்பன் நிசும்பன் என்றிரண்டு பொல்லா
சூரர்களப்போ உண்டானார்கள்
பால்யவயதில் தபசுபண்ணி அவர்
வரங்கள் வேணதெல்லாமடைந்தார்.

48. இந்திரனுடனே தேவர்கள் பிரம்மனை
ஏல்லோரையுமடித்துத் துரத்தி
சமஸ்தலோகம் நடுங்கிடச்செய்து
சங்கையில்லாமலே ஆண்டிருந்தார்.

49. நடுங்கிப் போயந்தத் தேவர்களெல்லாம்
நமக்குப் பொல்லாத காலமென்று
வெவ்வேறு ரூபமெடுத்துக்கொண்டு தேவாள்
பூலோகத்தில் வந்து சஞ்சரித்தார்.

50. நாற்பத்தொரு சதுர்யுகமாய்த் தேவா
ராஜ்ஜியந்தன்னை யிழந்திருந்தார்
விமோசன மொன்றையும் காணோமே என்று
விஷ்ணு உலகத்திற் கோடிவந்தாள்.

51. நடுங்கிவந்தீர்கள் தேவர்களே இப்போ
நம்மாலிதற்கொன்று மாகாது
விஷ்ணுமூர்த்தியும் தேவரும் இந்திரனும்
விரிஜ்சமூர்த்தியுங் கூடிக்கொண்டு

52. மஹாமேரு பர்வதச்சாரலிலே
வந்து பிரம்மாதி தேவரெல்லாம்
இதற்கு நாமென்ன செய்யப் போருமென்று
ஏக்கமடைந்தார் அமராளெல்லாம்

53. புத்தியுள்ள ஒருதேவனப்போ எண்ணி
பூர்வத்தில் தேவியும் சொன்னரே
இடுக்கண் வந்திட்ட வேளையினிலே
என்னை ஸ்துதியுங்கள் என்ருரே.

54. ஆமாம் அதுவும் உள்ளதென் றெண்ணியே
அமரா ளெல்லாரும் கூடிக்கொண்டு
நமஸ்தே நமஸ்தே என்று சொல்லியப்போ
ராஜேஸ்வரியை ஸ்தோத்தரித்தார்

55. மூலாதாரி சரஸ்வதியே ஜகந்
மோஹினியே நமஸ்காரம்
மாயாதாரியே லக்ஷ்மியே
மாஹேஸ்வரியே நமஸ்காரம்

56. பகவான் தேகத்தில் பாதியன்ருே எங்கள்
பார்வதியே நமஸ்காரம்

எங்களை ரக்ஷிக்க வேண்டுமிப்போ ஜக
தீஸ்வரியே நமஸ்காரம் என்று

57. தேவரெல்லாருமாய் ஸ்தோத்தரிக்க
தேவியும் பிரத்யக்ஷமாக வந்து
அஞ்சாதேயுங்கள் நீங்களென்று
(அப)யஸ்தங்கொடுத்தாள் தேவருக்கு

58. ஹிமயபர்வதந் தன்னில்வந்து தேவி
கன்னிகாரூப மெடுத்துக்கொண்டு
கோகிலம் போலும் குரலுடையாள்
கொம்புத்தேன்போலும் மொழியுடையாள்

59. ஹம்ஸம்போலும் நடையுடையாள்
அபயங்கொடுக்கும் கரமுடையாள்
மன்மதன் கைகொண்ட விற்போலுமுள்ள
வளைந்த புருவச் சிலையழகும்

60. முத்துகோத்தாப்போல் பல்லொளியும்
பவழம் போன்ற அதரங்களும்
பட்டமுஞ்சூட்டியும் நெற்றிதனில் மின்ன
பதக்கம் சரப்பளி மார்பிலசைய

61. தண்டைசிலம்பு கல கலவென்னக்காலில்
சிலம்பு கொஞ்சிச் சலுஞ்சலென்க
சொர்ணமயமான ஊஞ்சலில் இருந்து
கோடிஸூர்யர் உதித்தது போல்

62. தங்கத்தினாலான சங்கிலியைத் தொட்டு
தானேபாடிக்கொண்டு ஆடலுற்றாள்
சண்டமுண்டரென்ற இரண்டசுரர்களும்
(தேவி) கானந்தன்னைக்கேட்டு ஒடி வந்து

63. தேவியுடைய அருகினில் வந்தாள்
சேதியொன்று எடுத்துரைப்பாள்
எங்கள் ராஜாவின் ப்ரதாபங்கள் தன்னை
இத்தனை நாளிலுங் கேட்டில்லையோ

64. சும்பன் நிசும்பன் என்றிரண்டுபேர்கள்
மூன்று உலகமும் ஆண்டிருக்காள்
உமக்குமெத்த அழகிருந்து மிப்போ
போக பாக்கியம் புஜியாமல்

65. அதிசயமான ரூபத்துடன் நீரும்
தனித்திருக்கின்ற காரியமேன்
எங்கள் ராஜனுக்கே ஏர்வையம்மா நீர்
இந்தக்ஷணத்தில் வாருமம்மா

66. வாருமென்றஸுரன் சொல்லலுமே
மஹேஸ்வரியும் எடுத்துரைப்பாள்
ஸ்த்ரீபுத்திக்கு ஸ்திரமில்லையே நான்
தெரியாமலே ஒன்று செய்து விட்டேன்

67. பிரதிக்ஞை ஒன்று செய்துகொண்டேன்
என் பர்த்தாவாய் வரவேணுமென்றால்
யுத்தம் பண்ணியே என்னை ஜயித்தவர்
எனக்கிஷ்டமாகிய பர்த்தாவென்று

68. உங்களிராஜர்க்குக் சொல்லுங்களென்றம்மன்
உத்தரஞ்சொல்லி அனுப்பிவைத்தாள்
சண்டமுண்டரும் ஓடிவந்தாரந்தச்
சும்ப நிசும்பர் அண்டையினில்

69. உச்சிதமாகின்ற ரத்தினங்கள்
உங்களிடத்தில் இருந்தாலும்
சேர்க்கவேண்டிய இரத்தினங்களில்
ஸ்திரீ ரத்தினம் உங்களுக்கில்லையே

70. ஏற்றமானதோர் கன்னிகாரத்தினம்
ஹிமய பருவதத்திலிருக்காள்
சகாயமாகப் புருஷர்களுமில்லை
தனித்திருக்காள் சகியுடனே

71. சண்டமுண்டரும் சொல்லலுமே
கம்பாஸுரன் கேட்டுச்சந்தோஷமாய்
சும்பன் மகிழ்ந்து தன் மந்திரியான
சுக்ரீவன் தன்னைக்கிட்டழைத்து

72. என்மகிமைகளை அவளுக்குரைத்து (நல்ல
இஷ்டமாகிய வார்த்தைசொல்லி
வார்த்தைசொல்லி வசமாக்கிக்கொண்டு
வாருமென்று அனுப்பிவைத்தான்

73. சுக்ரீவன் கேட்டு சந்தோஷமாய் வெகு
சீக்கிரமாகவே ஓடிவந்தான்

தேவியருகினில் கிட்டிவந்து மெள்ளச்
சேதியை நன்ருய் எடுத்துரைப்பான்

74. எங்கள் ராஜாவின் சேதிப்ர தாபங்கள்
வந்தவர்களிங்கே சொல்லலேயோ
கம்பநிசும்பனென்று இரண்டுபேர்
மூன்றுலகுங்கட்டி யாண்டிருக்காள்

75. உமக்கு மெத்த அழகிருந்தும் நல்ல
போகபாக்கியம் புஜியாமல்
(இந்த) அதிரூப சவுந்தரியத்துடன்
தனித்திருக்கின்ற காரியமேன்

76. எங்களிராஜற்கு ஏர்வையம்மா நீர்
இந்த க்ஷணத்தினில் வாருமென்ருன்
வாருமென்று அழைக்கலுமேயவன்
மாஹேச்வரியுமேது சொல்வாள்

77. சபதமொன்றல்லோ செய்திருக்கேன்
சத்தியமாகவே சொல்லுகிறேன்
சண்டையிட்டு என்னை ஜயித்தவர்கள்
கொண்டுபோகலாமென்று சொல்லி

78. உங்களிராஜர்க்குச் சொல்லுங்களென்று
உத்தரஞ் சொல்லி யனுப்பிவைத்தாள்
சுக்ரீவன் கேட்டுக் கோபத்துடள்
சும்பாஸுரன் கிட்டவந்து சொன்ஞன்

79. சும்பாஸுரன் கேட்டுக் கோபத்துடன்
தூம்ப்ரலோசனனைக் கிட்டழைத்து
நயபயமாய் அவளுக்குச் சொல்லி
நம்ம மகிமை எடுத்துரைத்து

80. (இந்தச்) சேதியொன்றையுங் கேட்காவிட்டால்
சிட்சை பண்ணிக்கொண்டு வாருமென்ருன்
தூம்ப்ரலோசனன் கேட்டுச் சந்தோஷமாய்
துரிதமுடன் தேவிகிட்டவந்து

81. ஏனம்மா இந்த அக்ரமம் உனக்கு
எங்கள் இராஜரிடத்திலே
சேராதே போனுல் உம்மையிப்போ நான்
சிட்சைபண்ணுவே னென்று சொல்லி

82. அதட்டியே சிலவார்த்தை சொல்லியவன்
இழுக்க வந்திட்டான் அம்மனேயும்
பார்த்து அம்மனும் ஹுங்காரம் பண்ணவே
பஸ்மமாக எரிந்துபோனுன்

83. தூம்ப்ரலோசனன் பட்டுப்போனுனென்று
தூதர்கள் ஓடிச்சொன்னுருடனே
மந்திரியும் பட்டுப்போனுன் என்றவுடன்
மண்டியெரிந்து கண்கள் சிவந்து

84. சண்டமுண்டரைக் கிட்டழைத்து நீங்கள்
சம்ஹரித்திங்கே வாருமென்ருன்
சண்டமுண்டரும் ஓடிவந்து அந்தச்
சங்கரி தேவியை வந்தெதிர்த்தார்

85. கண்டு தேவிதன் கோபத்தீயாலே
காளிதேவியை உண்டாக்கிஞள் (அவள்)
சண்டமுண்டர் தலேயை வெட்டிச்சிவ
சங்கரி தேவிமுன் வைத்து நின்ருள்

86. சங்கரியம்மனும் சந்தோஷமாயப்போ
சாமுண்டி என்றபேர் தான்கொடுத்தாள்
தேவர்சுள் எல்லாருங் கூடிக்கொண்டு மஹா
தேவிக்குப் புஷ்பமலர் சொரிந்தாள்

87. சண்டமுண்டரும் பட்டாரென்று கேட்டு
சர்ப்பம்போலே யவன் சீறிக்கொண்டு
தனக்குண்டானதோர் சேனேக்கெல்லாமப்போ
அரைக்ஷணத்தில் ஆளேவிட்டான்

88. எண்பத்து நாலாயிரம் சேனேகளும்
இமைப்பொழுதினிற் கூட்டிவைத்தான்
அதிபலவானுன இரத்த பீஜன் றன்னே
அம்பிகை முன்னுல் அனுப்பிவைத்தான்

89. சகலதேவர்கள் அம்சங்களுஞ் சேர்ந்து
ஸப்தமாதர்கள் உண்டாஞள்
நாராயணி நரசிம்ஹி என்றும்
வைஷ்ணவி மஹாதேவி என்றும்

90. பிராஹ்மாணி கௌமாரி என்றும்
காளி சாமுண்டிதேவி என்றும்

ஈச்வரியுடையதோழிகளாகவே
ஏழுபெண்டுகள் கூடிக்கொண்டு

91. ரத்தபீஜனுடன் யுத்தம் பண்ணும்போது
ரத்தங்கீழே விழுந்ததப்போ
பிந்துவுக்குப்பிந்து இரத்தபீஜனுக
பூமியெங்கிலும் முளைக்கலானுன்

92. அம்பிகையுடைய அனுக்ஞையினுல் மஹா
அட்டகாஸத்துடன் காளிதேவி
இரத்தபீஜனை சம்ஹரித்து அவன்
இரத்தமெல்லாம் உரிஞ்சிவிட்டாள்

93. காளிகாதேவியும் இரத்த பீஜர்களை
வாரி வாரி விழுங்கிவிட்டாள்
இரத்த பீஜனும் பட்டவுடன் பொல்லா
நிசும்பனும் பார்த்துக் கோபத்துடன்

94. ஸம்ஹரிப்பேன் இவளையென்று சொல்லி
சபதம் செய்து தமயன் முன்னே
தேவியுடனே எதிர்த்து நிசும்பனும்
தோற்காமலே யுத்தம்செய்து நின்ருன்.

95. ஆயிரமாயிரம் அம்பு தொடுத்தவன்
அஞ்சாமலே யுத்தம் பண்ண லுற்ருன்
நேரேயுத்தம்பண்ணி லீலாவிநோதமாய்
நிசும்பனைக்கொன்ருள் ஸ்ரீதேவியும்

96. தம்பியும் பட்டதைக் கேட்டுச் சும்பாஸுரன்
சங்கையில்லாத கோபத்துடன்
அம்பிகையெதிரில் வந்து சும்பாஸுரன்
ஆங்காரத்துடன் ஏது சொல்வன்

97. உயுத்தம் பண்ணத் தெரிந்தவளோ எங்கள்
இத்தனை பேரையும் ஏய்த்தாயேடி
யாருமில்லாதே யிருந்தாயடி நீயும்
ஏழுபேருடனிப்போ நின்ருயடி

98. (என்) அளவில்லாத சேனைகளுக்கெல்லாம்
அனலாக வந்து நின்ருயடி
(என்) சங்கையில்லாத சேனைகளுக்கெல்லாம்
சதிகாரியாக நீ வந்தாயடி

99. சதிகாரியடி நீயுமிப்போ என்னை
சற்பனை செய்யவே வந்தாயடி
வஞ்சித்தாயடிநீயுமென்னை யிப்போ
வார்த்தைகள் இரண்டு சொன்னாயடி

100. ஒருத்தியாக இருந்து கொண்டன்றோ நீ
உத்தரஞ்சொல்லி யனுப்பிவைத்தாய்
அத்தனைபேர்களைச் சேர்த்துக்கொண்டு
அமட்டுகிறாயடி நீயுமென்னை

101. உன் அழகான உருவத்தைக் கண்டபின்
அமர்புரிய வென் கையெழுமோ
துரத்தி எல்லோரையும் காளியை என்னுடன்
தொந்தயுத்தம் பண்ணச்சொல்வாயென்றான்

102. சும்பன் வார்த்தையைக் கேட்டுச் சகிகளை
இங்கே வாருங்கள் என்றழைத்து
வாரியணைத்தாள் சகிகள் எல்லோரையும்
மாரோடு மறைந்து ஐக்கியமானாள்

103. இரண்டாம்பேரிங்கில்லை காளியுடன் நீ
எதிர்த்து யுத்தமும் பண்ணுயென்றாள்
அம்மன் செயலையும் வார்த்தையையும் கேட்டு
அம்புபட்டாப் போலுந்தானுருகி

104. சும்பாஸுரனும் காளிகாதேவியும்
தோற்காமலே யுத்தம் பண்ணலுற்றார்
அடித்தபந்து கிளம்பினாற்போலவன்
ஆகாயத்தினிலே கிளம்பி

105. ஒருவர்க்கொருவர் சளையாமல் அங்கு
ஓடோடியுத்தமும் பண்ணினார்கள்
சும்பாஸுரனும் காளிகாதேவியும்
தொந்தயுத்தமும் பண்ணினார்கள்

106. தேவர்களெல்லாம் பயத்துடனே மஹா
தேவியைஸ்துதித்துக் கொண்டிருந்தாள்
எத்தனைபோதாக யுத்தம் பண்ணுவோம்
என்று காளியும் கோபத்துடன்

107. சும்பாஸுரனை வதைத்தாள் காளியும்
துர்க்காதேவியென்றம்மனை அழைத்தாள்

துர்க்காதேவியம்மன் அஸுரனை வதைக்க
தேவர்கள் புஷ்பமழை சொரிந்தாள்

108. அத்தனை தேவர்களும் கூடி ஜக
தம்பிகைதன்னை ஸ்துதிக்கலானார்
சும்பநிசும்பரை ஸம்ஹரித்த எங்கள்
துர்க்காதேவி நமஸ்காரம்

109. துக்கம்போக்கியே நாடுதந்த எங்கள்
தேவியுமக்கு நமஸ்காரம்
சண்டமுண்டனை ஸம்ஹரித்த எங்கள்
துர்க்காதேவி நமஸ்காரம்

110. ரத்தபீஜனை ஸம்ஹரித்த எங்கள்
பத்திரகாளி நமஸ்காரம் (என்று)
பக்தியாய்த் தேவர்பணிந்து ஸ்துதித்திடப்
(பர) தேவியும் பார்த்துச் சந்தோஷமானாள்.

## தேவியைப் பூஜித்து ஸ்துதித்தவர்கள் அடையும் பலனை விவரித்தல்

111. ஆபத்துக்கள் ஒன்றும் வராது
அன்புடனிதைப் படித்தவர்க்கு
பேய்பிசாசுகள் அண்டாதவர்களும்
புத்திரசோகம் அனுபவியார்

112. தரித்திரங்கள் அனுபவியார்
தீர்க்காயுசையும் நான் கொடுப்பேன்
புத்திரசம்பத்தும் நான் கொடுப்பேன்
பரதேவதை பக்தியைச் செய்த பேர்க்கு

113. விப்ரர்களிதைக்கேட்டு விட்டால்
வேத சாஸ்திரம் விருத்தியாகும்
க்ஷத்திரியர்களிதைக்கேட்டு விட்டால்
ஜயத்துடனே அரசாள்வார்

114. வைசியர்களிதைக்கேட்டு விட்டால்
வியாபாரத்தில் வெகுலாபமுண்டாம்
சூத்திரர்களிதைக்கேட்டு விட்டால் நல்ல
ஜயமடைவான் கிருஷித்தொழிலில்

115. ஸ்திரீகள் பக்தியுடனே படித்தாலிதை
தீர்க்க சுமங்கலியா யிருப்பாள்
கன்னியாப்பெண்களிதைப்படித்தால் நல்ல
கணவர்தன்னை யடைந்திடுவாள்

116. நவராத்திரியில் தவருமல் பூஜித்தால்
ராஜேஜஸ்வரியின் கிருபை யடைவார்
பஞ்சபர்வங்களில் பக்தியாய் பூஜித்தால்
பரதேவியின் பதமடைவார்

117. நித்தியமாக ஸ்துதித்தவர்களுக்கு
நினைத்த வரமும் நான் கொடுப்பேன்
வெள்ளி செவ்வாயில் ஸ்துதித்தவர்களுக்கு
வேண்டும் வரங்கள் கொடுத்திடுவேன்

118. மனதிலுள்ள அபீஷ்டங்களெல்லாம்
வருந்தும் உங்கட்கு தருவோமென்ருள்
தருவேனென்றம்மன் சொல்லலுமே அந்த
தேவர்களெல்லாம் மனமகிழ்ந்து

119. ஒருக்காலும் ஆபத்து வந்திடாமல்
உகந்து ரக்ஷிக்க வேணுமம்மா
உகந்து ரக்ஷிக்க வேணுமென்றவுடன்
உலக நாயகி ஏது சொல்வாள்

120. அநேககாலங் கழிந்தவுடன் பொல்லா
அஸுரர் மிகவும் உபத்திரவிப்பாள்
நந்தகோபர் அரண்மனை தன்னில்
கண்ணனுய் பிறந்து ரக்ஷிக்கிறேன்

121. பாரத மாதாவாய் ராஜ்ஜியங்களெல்லாம்
பரிபாலித்து நான் ரக்ஷிக்கிறேன்
ஆறுதல் சொல்லியே தேவர் எல்லோருக்கும்
அம்பிகை அந்தர்த்தான மடைந்தாள்

**சுரதனென்ற ராஜனும் சமாதி என்ற கோமுட்டியும்
தேவீயை பூஜித்துப் பலனடைதல்**

122. வைசியனும் மகாராஜாவும் தேவியின்
மகிமை கேட்டு மனமகிழ்ந்து

தவமுனிவர் அனுக்ஞையினுல் ஜகத
தம்மனே நோக்கித் தபசுசெய்ய

123. சையபருவதம் சாரலிலே வந்தார்
சமாதியுடனே இராஜனப்போ
இந்திரியங்களுடன் வாயுவையும்
எல்லாவற்றையும் உள்ளடக்கி

124. அம்மனே நோக்கி இருவருமாய்
அநேகங்காலம் தவமிருந்தாள்
தபஸைக்கண்டதி சந்தோஷமாய்
சங்கரியுமவாள் முன்னே வந்தாள்

125. என்ன வரம்வேணுமென்று அசுரனே
ஈச்வரி தேவியுங் கேட்கலுமே
எந்தனுடையதோர் நடுராஜ்ஜியங்களும்
எப்போதும்போலவே வேண்டுமென்ருர்

126. ராஜ்ஜியத்தை யடைவாயென்றம்மன்
ராஜாவைப் பார்த்து எடுத்துரைப்பாள்
அறுபதிஞயிரம் ராஜ்ஜியத்தையாண்டு
அவதரிப்பாய் மநுவாக

127. ராஜாவைப்பார்த்து வரங்கொடுத்து அம்மன்
சாமதியைப்பார்த்துக் கேளுமென்ருள்
(உங்கள்) ஐக்கியம் ஒன்றுமே போதுமம்மா
உம்முடைய கிருபை வேணுமம்மா

128. அப்படியே உந்தன் சித்தம் துலங்கியே
ஆத்மக்கியானம் அடைந்திடுவாய்
ஜீவன் முக்தியடைந்திடுவாயென்று
தேவியும் அந்தர்த்தான மடைந்தாள்

129. ராஜனும் தெவிகிருபை யடைந்து தன்
ராஜ்ஜியமடைந்து ஆண்டிருந்தான்
சுமேதஸ் முனியின் ஆசிரமத்தில்
சாமதியும் ஞானவாஞயிருந்தான்

180. தேவி பாகவத புராணத்திலுள்ள
சிறந்த ஐந்தாம் ஸ்கந்தமிதை

ஒ25:417
N69



துஷ்ட அஸுரரை சம்ஹரித்த இந்த
தேவி மகிமை படித்தவர்கள்

131. அன்புடன் தேவி மகிமை தன்னைச் சொல்லி
அநுதினமும் ஸ்துதித்தவர்கள்
அம்பிகை பாதாரவிந்தத்திலேயவர்
ஐக்கியப் பதமடைந்திடுவாள்

## மங்களம்

ஹாரத்தி—எத்தி வாரிஜமுகி சீதாதேவிக்கு
என்ற மெட்டில் பாடலாம்.

1. மங்களம் ஜயமங்களம் ஜய மஹாதேவிக்கு
மங்களம் லலிதாதேவியுடன் மஹாகாளிக்கு

2. சங்கு சக்கரம் கையில் தரித்த—சக்ரநாதைக்கு
சங்கையில்லாத அஸுரரானைக் கொன்ற-சாமுண்டி
தேவிக்கு

3. துஷ்ட அஸுரானை ஜயித்த துர்காதேவிக்கு
சிஷ்டர்களான தேவரைக் காத்த ரக்தாம்பாளுக்கு

4. இஷ்டதெய்வமாம் எங்களை ரக்ஷிக்கும்-எமஸ்வரூபிக்கு
கஷ்டம் நீங்கிக் கருணைபொழியும் காமாக்ஷி தேவிக்கு

5. அஷ்டபோகபாக்கியமளிக்கும் ஆதிசக்திக்கு
துஷ்ட பண்டாஸுரனை வதைத்த ஸ்ரீ லலிதைக்கு

6. சகலதேவ ஸ்வரூபியான சக்தி கௌரிக்கு
அகிலலோகத்தை பரிபாலித்திடும் அம்பா தேவிக்கு

7. வாழ்க தேவி நாமம்வாழ்க மறைகள் வாழ்கவே
வாழ்க மானிடர்வாழ்க ஆவினம்-வளமையாகவே

8, பக்தருக்கருள் பொழியும் ஸ்ரீ—புரதேவி வாழ்கவே
அத்யந்த பக்தியுடனே படிக்கும்—அன்பர்வாழ்கவே.

ஓம் சுபம்

தத்-ஸத்-பிரம்மார்ப்பிதம்

முற்றிற்று.

TAMIL NADU ARCHIVES No. 109463

## ஸ்ரீ ஆண்டவன் பிச்சி அவர்களால் தொகுக்கப்பட்ட நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆறுபடை வீட்டுத் திருப்புகழ் பதிகங்கள் கீர்த்தனங்கள் | ... | 0 | 50 |

**பகவத் கீதா போதம்**

| | | | |
|---|---|---|---|
| கீதையின் ஸ்லோகங்களை செய்யுளாக அருள் வாக்கினால் தொகுக்கப்பட்டது | ... | 1 | 00 |
| முருகன் அருட்பாவை | ... | 0 | 12 |
| குமரகுருபரன் பிள்ளைத் தமிழ் | ... | 0 | 12 |

## சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் தொகுக்கப்பட்ட

| | | | |
|---|---|---|---|
| ஜயமங்கள ஸ்தோத்ரம் நாகர ஸ்லோகம்—தமிழ் ஸ்லோகம் அர்த்தத்துடன் 6 பாகங்கள் சேர்ந்தது | | 7 | 25 |
| 7, 8, 9, 10 பாகங்சள் | ... | 9 | 00 |
| 11 பாகம் | ... | 2 | 50 |
| 12 பாகம் | ... | 2 | 50 |

## V. G. ரெங்காசாரியார் அவர்கள் எழுதிய உரையுடன் கூடிய

| | | | |
|---|---|---|---|
| சுந்தர காண்டம் ... | ... | 6 | 00 |
| பகவத்கீதை கருத்துரையுடன் ... | ... | 1 | 25 |
| சுந்தரகாண்டம் மூலம் ... | ... | 2 | 75 |

# பி. டி. பாணி

**17, வெங்கடாசல செட்டி தெரு,**

**திருவல்லிக்கேணி, : : மதராஸ்-5.**

# தமிழில் பி. டி. பாணி சீரீஸ் புத்தகங்கள்

| | | Rs. | P. |
|---|---|---|---|
| 1 | யஜுர்வேத ஸந்தியாவந்தனம் | 0 | 16 |
| 2 | ருக்வேத ஸந்தியாவந்தனம் | 0 | 20 |
| 3 | ஸ்யாமளா தண்டகம் | 0 | 10 |
| 4 | முகுந்தமாலை நாமாவளியுடன் | 0 | 15 |
| 5 | ஸாமஸந்தியாவந்தனம் தர்ப்பணம் | 0 | 20 |
| 6 | ஸ்தோத்ரமாலா | 0 | 25 |
| 7 | கல்பத்ரயம் 3 பூஜைகள் | 0 | 31 |
| 8 | விஷ்ணு ஸகஸ்ரநாமம் | 0 | 50 |
| 9 | சுப்ரமண்ய புஜங்க ஸ்தோத்ரம் | 0 | 16 |
| 10 | லக்ஷ்மி ஸகஸ்ரநாமம் | 0 | 50 |
| 11 | லலிதா ஸகஸ்ரநாமம் | 0 | 60 |
| 12 | சுப்ரமண்ய பூஜாவிதி | 0 | 25 |
| 13 | புருஷஸூக்தம் | 0 | 12 |
| 14 | இந்திரராக்ஷி சிவகவசம் | 0 | 16 |
| 15 | ஆதித்ய ஹ்ருதயம் அர்த்தத்துடன் | 0 | 16 |
| 16 | ஸௌந்தர்யலஹரி | 0 | 16 |
| 17 | பஜகோவிந்தம், கோபிகாகீதை | 0 | 06 |
| 18 | சுப்ரமண்ய ஸகஸ்ரநாமம் | 0 | 50 |
| 19 | மஹாலக்ஷ்மி அஷ்டோத்தர சதம் | 0 | 16 |
| 20 | சிவாநந்தலஹரி | 0 | 16 |
| 21 | யஜுர் உபகர்மம் | 0 | 15 |
| 22 | நவக்ரஹ ஸ்தோத்ரம் | 0 | 20 |
| 23 | பூஜாராமாயணம் நாம ராமாயணம் | 0 | 06 |
| 24 | அகிலாண்டேஸ்வரி அக்ஷரமாலிகா | 0 | 10 |
| 25 | யஜுஸ் ஸந்தியா பாஷ்யம் | 0 | 31 |
| 26 | சங்கராந்தி பூஜை கோபூஜை | 0 | 16 |
| 27 | மார்கபந்து ஸ்தோத்ரம் | 0 | 12 |
| 28 | நித்தியான்னிகம் | 0 | 56 |
| 29 | ஸதாசிவ கீர்த்தனங்கள் | 0 | 06 |
| 30 | அஷ்டபதியும், கீதகோவிந்தமும் | 0 | 31 |
| 31 | விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்ரம் | 0 | 12 |
| 32 | தேவி நித்ய பாராயணம் | 0 | 62 |
| 33 | தேவி கட்கமாலா நாமாவளியுடன் | 0 | 10 |
| 34 | அஷ்டோத்ர கதம்பம் | 0 | 56 |
| 35 | மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்திரம் | 0 | 10 |
| 36 | லலிதா திரிசதி | 0 | 25 |
| 37 | பில்வாஷ்டோத்ரம் | 0 | 16 |
| 38 | தேவிமஹாத்மியம் | 1 | 50 |
| 39 | நீதி சாஸ்திரம் (உரையுடன்) | 0 | 50 |
| 40 | சிவ ஸவஸ்ரநாமம் | 0 | 50 |

| | | | |
|---|---|---|---|
| 41 | கணபதி ஸகஸ்ரநாமம் | 0 | 50 |
| 42 | துர்க்கா ஸகஸ்ரநாகம் | 0 | 50 |
| 43 | அக்ஷரமாலிகாத்ரயம் | 0 | 10 |
| 44 | ரகுவீரகத்யம் | 0 | 12 |
| 45 | வெங்கடேச ஸகஸ்ரநாமம் | 0 | 50 |
| 46 | சஷ்டி மாலா | 0 | 12 |
| 47 | சுப்ரமண்ய திரிசதி | 0 | 12 |
| 48 | முருகன் அருட்பாவை | 0 | 12 |
| 49 | காயத்ரி ராமாயணம் | 0 | 06 |
| 50 | சூர்ய நமஸ்காரம் | 0 | 10 |
| 51 | சனீஸ்வர ஸகஸ்ரம் | 0 | 50 |
| 52 | குமரகுருபரன் பிள்ளைத்தமிழ் | 0 | 12 |
| 53 | மும்மணிக்கோவை (திருத்தணி) | 0 | 10 |
| 54 | ஸ்ரீ ராமர் ஸகஸ்ரநாமம் | 0 | 50 |
| 55 | ஹனுமத் ஸகஸ்ரநாமம் | 0 | 50 |
| 56 | முருகன் தோத்ர மாலை | 0 | 25 |
| 57 | ஆறு படைவீட்டுத் திருப்புகழ் | 0 | 50 |
| 58 | கலிவெண்பா (திருத்தணி) | 0 | 10 |
| 59 | ஸ்ரீஸ்துதி | 0 | 10 |
| 60 | கிருஷ்ண ஜயந்தி பூஜை | 0 | 16 |
| 61 | ருத்ரம்—சமகம் | 0 | 25 |
| 62 | பவானி புஜங்கம் | 0 | 06 |
| 63 | நாராயணீயம் | 0 | 10 |
| 64 | சடாக்ஷர அஷ்டோத்ரம் | 0 | 10 |
| 65 | ஸ்ரீ தத்தாத்ரேய பஞ்சரத்னம் | 0 | 06 |
| 66 | வெங்கடேச்வர பூஜாவிதி | 0 | 12 |
| 67 | கோளறுப் பதிகம் அர்த்தத்துடன் | 0 | 05 |
| 68 | திருவிளக்குப் பூஜாவிதி | 0 | 25 |
| 69 | ஷண்முக ரக்ஷாபந்தனம் | 0 | 05 |
| 70 | ஸ்ரீ மீனுக்ஷி நவராத்ரி ஸ்தோத்ர ரத்னமாலா | 0 | 20 |
| 71 | ம்ருத்யுஞ்ஜய ஸ்தோத்ரம் | 0 | 06 |
| 72 | வேங்கடேச ஸுப்ரபாதம் | 0 | 10 |
| 73 | சுப்ரமண்ய ஸுப்ரபாதம் | 0 | 15 |
| 74 | ஸம்க்ஷேப ராமாயணம் | 0 | 31 |
| 75 | நவக்ரஹ அஷ்டோத்தர சத நமாவளி | 0 | 30 |
| 76 | சரஸ்வதி ஸகஸ்ரநாமம் | 0 | 50 |
| 77 | ஹயக்ரீவர் ஸ்தோத்ரம் | 0 | 10 |
| | புகழ்மணி வாசகம் | 0 | 75 |
| | பஜனோத்ஸவ பத்ததி | 0 | 88 |
| | சுந்தரகாண்டம் (உரையுடன்) | 6 | 00 |
| | சுந்தரகாண்டம் மூலம் | 2 | 75 |
| | பகவத்கீதை மூலம் | 1 | 25 |
| | பகவத்கீதா போதம் (செய்யுள்) | 1 | 00 |
| | ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஆசார்யாள் திவ்ய சரிதம் | 5 | 00 |

# விளம்பரம்.

## R. S. சுபலக்ஷ்மி அம்மாளால்

### பிரசுரிக்கப்பட்ட புஸ்தகங்கள்.

| | | Rs. | P. |
|---|---|---|---|
| 1. | வால்மீகி ராமாயணப்பாட்டும் ஞான ராமாயணக் கப்பலும் ... | 0 | 60 |
| 2. | குசலவ வாக்கியம் ... | 0 | 62 |
| 3. | அனந்தங்காடு ... | 0 | 25 |
| 4. | ஸ்ரீ பார்வதி அம்மன் சோபனம் ... | 0 | 75 |
| 5. | வேதாந்தப் பாட்டுகளும் தினசா ஸ்தோத்திரங்களும் ... | 0 | 60 |
| 6. | ஜீவநாடகம் முதலிய சில அத்வைதப் பாட்டுக்களும் பஞ்சீகரண மகாவாக்கியமும் ... | 0 | 56 |
| 7. | பஞ்சீகரண கட்டம் ... | 0 | 12 |
| 8. | சாவித்ரி பாடம் ... | 0 | 25 |
| 9. | ஐந்து கும்மிகள் ... | 0 | 31 |
| 10. | குறவஞ்சி (அகண்ட வெளிக்குறம், வேதாந்தக் குறம் தர்மாம்பாள்) ... | 0 | 37 |

| | | | |
|---|---|---|---|
| 1. | கந்தரனுபூதி (விளக்க உரையுடன்) ... | 1 | 50 |
| 2. | திருப்புகழ் ... | 1 | 25 |
| 3. | புகழ்மணி வாசகம் ... | 0 | 75 |
| 4. | பஜனோத்ஸவபக்தி ... | 0 | 88 |
| 5. | கிருஷ்ணலீலாதரங்கிணி ... | 1 | 50 |
| 6. | பகவத்கீதை கருத்துரையுடன் ... | 1 | 00 |
| 7. | பகவத்கீதாபோதம் ... | 1 | 00 |

**கிடைக்குமிடம் :—**

**பி. டி. பாணி அண்டு கோ,**

**17, வெங்கடாசல செட்டித் தெரு, திருவல்லிக்கேணி.**


பாரதி விஜயம் பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை - 5.